Registered as a Newspaper in Ceylon ★ ★ விலை சதம் 10

# ஈழநாடு
THE EELA NADU

தேசியதினசரி National Tamil Daily
மலர் 8 (12-8-66) இதழ் 183
பராபவ ஆடி 27 ரபி: ஆகி 24 வெள்ளிக்கிழமை

பட்டு உடைகளை சாயம் போடுவதும் ட்ரைக்கிளீன் செய்வதும்



சன்லைட் டையேர்ஸ் அன் ட்ரைகிளீனேர்ஸ்
(ராணித்தியேட்டருக்கு அருகாமை)
பெரியகடை யாழ்ப்பாணம்.
போன்: 474. தந்தி: ட்ரைக்கிளீன்

## நாகா. மந்திரிசபை கவிழ்ந்தது

கொஹிமா, ஆக. 11

நாகாலந்தில் திரு. ஷிலு ஆவோ மந்திரி சபை மீது கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானம் இன்று நிறைவேற்றப்பட்டது.

ஏற்கனவே முதன்மந்திரியுடன் கருத்துவேறுபாடு கொண்டு 6 மந்திரிகள் ராஜினாமா செய்திருந்தார்கள். மந்திரி சபையின் மொத்த உறுப்பினர்கள் 9 பேர்.

# ரத்வத்தை தேர்தல் அப்பீல் தள்ளுபடி

## கீழ் கோர்ட் தீர்ப்பு சுப்ரீம் கோர்ட்டில் ஊர்ஜிதம்

கொழும்பு, வெள்ளி

திரு. கிளிபோர்ட் ரத்வத்தை சுப்ரீம் கோர்ட்டில் தாக்கல் செய்திருந்த தேர்தல் ஆட்சேப வழக்கு அப்பீல் மனுவை நேற்று சுப்ரீம் கோர்ட் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்தது.

பலாங்கொடை தேர்தல் தொகுதியில் இருந்து மக்கள் பிரதிநிதிகள் சபைக்கு திரு. கிளிபோர்ட் ரத்வத்தை தெரிவு செய்யப்பட்டது செல்லுபடியாகாதென கீழ் கோர்ட்டில் அளிக்கப்பட்ட தீர்ப்பை எதிர்த்து திரு. கிளிபோர்ட் ரத்வத்தை சுப்ரீம் கோர்ட்டில் அப்பீல் மனு தாக்கல் செய்திருந்தார்.

பலாங்கொடை தேர்தல் ஆட்சேப வழக்கு கீழ் கோர்ட்டில் நீதிபதி திரு. ஸ்ரீஸ் கந்தராசா முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டு தேர்தல் செல்லுபடியாகாதென தீர்ப்பு வழங்கப்பட்டது. இந்தத் தீர்ப்பை எதிர்த்து திரு. கிளிபோர்ட் ரத்வத்தை சுப்ரீம் கோர்ட்டுக்கு மனு செய்தார். இந்த மனுவை பிரதம நீதியரசர் ஏ. சன்சோனி, நீதியரசர் எச். என். எஸ். பெர்னாண்டோ, நீதியரசர் டாக்டர் தம்பையா ஆகியவர்கள் விசாரித்தார்கள் நேற்று அவர்கள் வழங்கிய தீர்ப்பில் மனுவை செலவு தொகையுடன் தள்ளுபடி செய்தனர்.

திரு. கிளிபோர்ட் ரத்வத்தை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முக்கிய உறுப்பினர்களில் ஒருவர். அவர் திருமதி பண்டாரநாயகாவின் சகோதரர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## இந்தோனேஷிய - மலேஸிய கெடுபிடி முற்றாக முடிவு!

### சரித்திரப்பிரசித்திபெற்ற ஒப்பந்தம் கைச்சாத்து

ஜாகர்த்தா, ஆகஸ்ட் 11

மலேஸியாவுக்கு எதிராக கடந்த 3 ஆண்டு காலமாக நிலவிவந்த இந்தோனேஷியாவின் எதிர்ப்புக் கொள்கை முற்றாக முடிவுற்றது. இதுசம்பந்தமான சரித்திரப்பிரசித்திபெற்ற ஒப்பந்தத்தில் மலேஸிய துணைப் பிரதமர் துன் ரஸாக்கும், இந்தோனேஷிய வெளிநாட்டுமந்திரி டாக்டர் மாலிக்கும் இன்று கைச்சாத்திட்டனர்.

ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுமுகமாக ஜாகர்த்தா வந்திருந்த 50 பேரடங்கிய மலேஸிய தூதுகோஷ்டி நாளை கோலாலம்பூர் திரும்பும்.

கடந்த 1963-ம் ஆண்டு ஜூன்மாதம் முதல் இந்த எதிர்ப்புக்கொள்கை ஆரம்பமாகியது. புதிய ஒப்பந்தத்தின் விளைவாக, கடந்த 3 ஆண்டு யுத்தநிலைமை முடிவுறுவது மட்டுமின்றி இரு நாடுகளுக்கும் ஏற்பட்ட பொருளாதார நஷ்டமும் முற்றுப்பெறுகிறது.

இந்தக் கொள்கையின் காரணமாக 50,000 பிரிட்டிஷ், ஆஸ்திரேலிய, நியூஸீலந்து துருப்புக்கள் மலேஸியாவில் வைக்கப்பட்டிருந்தன. எதிர்ப்புக் கொள்கை ஆரம்பமானதிலிருந்து இதுவரை 100 மலேஸியர்களும், 400 இந்தோனேஷியர்களும் கொல்லப்பட்டனர்.

உடன்படிக்கையில் ஒப்பமிடுமுகமாக இன்று ஜாகர்த்தா வந்துசேர்ந்த மலேஸிய தூதுகோஷ்டிக்கு அரசாங்க முறையில் சிறந்த வரவேற்பு அளிக்கப்பட்டது.

இந்தோனேஷிய கைத்தொழில்கள் மீண்டும் இயங்கும் பொருட்டு ஆஸ்திரேலிய, கொழும்புத் திட்டத்தின் கீழ் கச்சப் பொருட்களை அந்நாட்டுக்கு உதவியாக வழங்கவிருக்கிறது.

ஸரவாக், ஸபா ஆகிய மலேஸியப்பகுதிகள் சுயநிர்ணயம் மூலம் தேர்தல் நடத்தி தங்கள் எதிர்காலம் பற்றித் தீர்மானிப்பதை இந்த ஒப்பந்தத்தின் மூலம் இந்தோனேஷியா ஏற்றுக்கொண்டிருக்கிறது.

நாளை நடைபெறவிருக்கும் மலேஸிய தேசிய தினத்தில் கலந்துகொள்ளுமுகமாக, இந்தோனேஷிய வெளிநாட்டு மந்திரி டாக்டர் மாலிக்கும் கோலாலம்பூர் செல்லவிருக்கிறார்.

## ஹோ ஒரு பெரும் தலைவர்

புதுடில்லி, ஆக. 11

'வடவியட்நாம் ஜனாதிபதி ஹோசிமின் ஒரு மாபெரும்தலைவர். அவரைச்சந்திக்க நான்பெரிதும் விரும்புகிறேன்' என இந்திய வெளிநாட்டுமந்திரி சுவரண் சிங் கூறினார்.

## மாடியிலிருந்து விழுந்து மரணம்

கொழும்பு, வெள்ளி

கொழும்பு கண்ணாஸ்பத்திரியில் உள்ள நோயாளி ஒருவர் மூன்றாவது மாடி ஜன்னலினூடாக விழுந்ததன் விளைவாக மரணமானார்.

## தமிழரசு டிக்கட்டில் பிரதமர் போட்டியிட வேண்டும்

### பிரதிநிதிகள் சபையில் ஆர். ஜி. கிண்டல்

கொழும்பு, வெள்ளி

திரு. ஆர். ஜி. சேனநாயக்கா நேற்று பிரதிநிதிகள் சபையில் பேசியபோது பிரதம மந்திரியின் யாழ்ப்பாணத்து விஜயம் பற்றிக்குறிப்பிட்டார்.

"இதற்கு முன்னரும் பிரதமர்கள் அங்கு போய் இருக்கிறார்கள். கடைசியாகப் போனவர் அரசர் என்று மகுடம் கூட சூட்டப்பட்டார். ஆனால் அவர் தெற்குக்கு திரும்பியதும் எட்டே எட்டு தொகுதிகளில்தான் அவர்கள் கட்சி வெற்றி பெற்றது என்று அவர் கிண்டல் செய்தார்.

பிரதம மந்திரிக்கு அமோக வரவேற்பு அளித்திருக்கிறார்கள். பிரதம மந்திரி அங்கு அடுத்த தேர்தலில் போட்டியிடலாம். ஆனால் தமிழரசுக் கட்சி டிக்கட்டில் தான் போட்டியிட வேண்டும் என்று ஆர். ஜி. குறிப்பிட்டார்.

மாவட்ட சபைகள் வந்ததுடன் தமிழரசுக் கட்சியின் கோரிக்கைகள் முடிவடைந்து விடுமா என்றும் அவர் கேட்டார்

தமிழரசுக் கட்சியினர் ஐக்கியம் பற்றி பேசுகிறார்கள் அவர்களே முஸ்லிம்களுக்கு பாகுபாடு செய்கிறார்கள், முஸ்லிம் பல்கலைக்கழகம் கிடைப்பதை அவர்கள் ஆதரிக்கவில்லை, அதுபோலவே சிறுபான்மை தமிழர்களுக்கும் அவர்கள் பாகுபாடு காட்டுகிறார்கள் என்று திரு ஆர். ஜி சேனநாயக்கா சொன்னார்.

## பிரஜாவுரிமை மனுவில் ரத்வத்தையின் குறிப்பு இருந்தது!

### லஞ்சவழக்கில் அட்டோனி ஜெனரல் உரை

கொழும்பு, வெள்ளி

காதர் சுல்தான் என்பருக்கு பிரஜாவுரிமை பெற்றுத் தருவதாகக் கூறி கொழும்பு வுல்பண்டால் வீதியைச் சேர்ந்த எஸ். ஆ. பி. பாப்புராஜ் என்பவரிடம் 1964 மார்ச் மாதம் ரூபா 5000 கைலஞ்சம் வாங்கியதாக டாக்டர் மெக்கி ரத்வத்தை மீது குற்றஞ்சாட்டித்தொடரப்பட்டுள்ள வழக்கு நேற்று மீண்டும் கொழும்பு கூட்டு நீதவான் திரு. எஸ். எல். குலதிலக்க முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

அட்டோர்னி ஜெனரல் திரு. ஏ. சி எம் அமீர் தமது ஆரம்பஉரையை நிகழ்த்தினார். அவர் கூறியதாவது:.

1964 மார்ச் மாதத்தில் மெக்கி ரத்வத்தை பிரதம மந்திரிக்கு அந்தரங்க காரியதரிசியாக கடமையாற்றினார். அவர் திருமதி பண்டாரநாயக்காவின் சகோதரர் கவர்னர் ஜெனரலின் மருமகனுமாவார். இரண்டாவது எதிரியான ஏ. ஆர் சீவரத்னம் ஒரு ஹோமியோபதி டாக்டர். அவருடைய வசிப்பிடம் ரத்வத்தை வளவுக்கு சுமார் 30 யார்களுக்கு அப்பால் இருக்கின்றது.

காதர் சுல்தான் மலாய் பிரஜை அவர் இலங்கையில் மாவனெல்ல என்ற இடத்தைச் சேர்ந்த ஒரு பெண்ணை மணம்முடித்துக்கொண்டார். இந்தத் திருமணம் அவர் தமது வசதிக்காக செய்துகொண்ட ஒன்று. இவர் விஷயத்தில் அக்கறை கொண்ட சிலர் அவருக்கு

(8-ம் பக்கம் பார்க்க)

## முகம்மது அலி மீது ஒழுங்கு நடவடிக்கை?

### தமிழரசுத தலைமைப் பீடம் விரைவில் ஆராயும்

கொழும்பு, வெள்ளி

முஸ்லிம்களுக்குத் தனியாக ஓர் பல்கலைக் கழகம் அமைக்க வேண்டுமென்றும், வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு சிங்கள ஆசிரியர்கள் அனுப்பப்பட வேண்டுமென்றும் மூதூர் எம். பி. திரு. எம். எச். எம், முகம்மது அலி நேற்றுக்காலை பாராளுமன்றத்தில் கூறியிருப்பது தமிழரசுக் கட்சித் தலைமைப்பீடத்துக்குக் கவலையைக் கொடுத்துள்ளதாகத்தெரிகிறது.

திரு. முகம்மது அலியின் இக்கோரிக்கையை [illegible] சேவை அமைச்சின் பாராளுமன்றக் [illegible] எம். எம். முஸ்தபாவும், மட்டக்களப்பின் இரண்டாவது எம். பி.யான யு. என். பி. அங்கத்தவர் திரு. ஏ சின்னலெப்பேயும் ஜனப்பிரதிநிதிகள் சபையில் ஆதரித்தனர்.

இவ்விஷயத்தில் திரு. முகம்மது அலி கட்சிக்கொறடாவின் ஆணையை மீறியிருப்பதால், தமிழரசுக் கட்சியின் தலைமைப் பீடத்தின் ஒழுங்கு நடவடிக்கையை எதிர்நோக்கி உள்ளார். கட்சியின் செயற்குழு விரைவில் கூடி இவ்விஷயத்தை ஆராயுமென எதிர்பார்க்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

**லொறியின் பொடி:**
மூன்றரைத் தொன் ஒவ்லின் லொறியின் பொடி மட்டும் (Body) விற்பனைக்குண்டு. விபரத்துக்கு நேரே தொடர்புசெய்யவும். மில்க்வைற் சோப் தொழிற்சாலை, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 836

**காணி**
அச்சுவேலிப் பிள்ளையார் கோவில் முன் றோட்டுக்கு வடக்குப் பக்கமாகவும், கோவிலுக்குக் கிழக்காகவும் தென்னை வைக்கக்கூடிய 15 பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு. விபரங்கட்கு S. கந்தையா, பெரியவளவு, புலோலி கிழக்கு அல்லது S. திருவிளங்கம் அச்சுவேலி வடக்கு. 820

### கல்வி

**வகுப்புகள்**
ஜி. ஸி. ஈ. சாதாரணம் கலை / விஞ்ஞானம் / வர்த்தகம் முதலிய வகுப்புகளுக்கு இன்னும் சில வெற்றிடங்களே உள்ளன. விடுதி வசதியும் உண்டு. ஐக்கியகலாசாலை, நெல்லியடி, கரவெட்டி / 107, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். 825

**பிரவேசங்கள்**
ஆங்கிலம் / தமிழ் தட்டெழுத்து, சுருக்கெழுத்து, கணக்குப் பதிவியல் வகுப்புகளுக்கு இப்பொழுது பிரவேசங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. பெண்களுக்குத் தனி விடுதி வசதி உண்டு. ஐக்கியகலாசாலை, நெல்லியடி, கரவெட்டி / 107, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். 826

### தேவை

**பெண்கள்:**
சில்க் ஸ்கிரீன் பிறின்ரிங் செய்வதற்கு S. S. C. படித்த இரு பெண்பிள்ளைகள் தேவை. சித்திரம் தெரிந்தவர்கள் விரும்பத்தக்கது. திருமதி ச. ஏகாம்பரநாதன், 8, சீனியர் லேன், கலட்டி, யாழ்ப்பாணம். 842

## 'வேலையில்லா பிரச்னை விரைவில் தீரும்'

கொழும்பு, வியா.
'வரவு செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கப்பட்டுள்ள அரசாங்கத்தின் அபிவிருத்தித் திட்டங்கள் அமுலாக்கப்படத் தொடங்கியதும் வேலையில்லாத் திண்டாட்டப் பிரச்னை தீர்க்கப்படுவதற்கான வழி பிறக்கும்' என ஹினிதுமை எம். பி. திரு எம். எ. அமரசிறீ ஜனப்பிரதிநிதிகள் சபையில் தெரிவித்தார்.

## ப. நோ. கூ. ச. சமாஜத்துக்கு இலாபம்

சுழிபுரம், வியா.
வலிகாமம் மேற்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்க சமாஜத்தின் சென்ற நிதியாண்டின் சுத்த இலாபமாக ரூபா 66670·15 சதம் கிடைத்துள்ளன. 42 சங்கங்களை அங்கத்துவமாகக் கொண்டுள்ள இச்சமாஜம் வலிகாமம் மேற்குப் பிரிவில் மிகப் பெரிய ஸ்தாபனமென்பதும், இச் சமாஜம் கல்லூண்டாயில் ஓர் உப்பளத்தை ஆரம்பித்து நடாத்தி வருவது என்பதும் இங்கு குறிப்பிடத் தக்கது.




## கிராமசேவரைத் தாக்கியதாக வழக்கு

ஊர்காவற்றுறை, வியா
எழுவைதீவு கிராமசேவகர் திரு. கே. கந்தசாமி என்பவரைக் கடமையாற்றத் தடைசெய்ததாகவும், அவரின் கள்ளக்கடத்தல் பொருட்களாகச் சந்தேகிக்கப்பட்ட பொருட்களைக் கண்டுபிடிக்கும் முயற்சிக்குத் தடைசெய்ததாகவும், அவர் வைத்திருந்த துப்பாக்கி ஒன்றை அடித்துப் பறித்ததாகவும் குற்றஞ்சாட்டி எழுவைதீவைச் சேர்ந்த ராயப்பு செல்வத்துரை, ஆர். சூசைப்பிள்ளை, கே. திருச்செல்வம், கே. காணிக்கைராசா, எஸ். யேசுதாஸன் ஆகியோர்மீது தொடரப்பட்ட வழக்கு ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

முதலாவது எதிரி ராயப்பு செல்வத்துரை சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

சம்பவம் நடந்த தினத்தன்று நான் எழுவைதீவில் இருந்தேன். இரண்டாவது எதிரி என் சகோதரர். மற்றவர்கள் மைத்துனர்கள். நான் கடல் தொழிலாளி. அத்துடன் கருவாடு வியாபாரம் செய்துவருகிறேன். கருவாடு வெளியிடங்களுக்கு அனுப்புவதற்குக் கிராம சேவகரிடமிருந்து உத்தரவுச் சீட்டுப்பெறவேண்டும். வழக்காளியான கிராமசேவகரை மூன்றுவருட காலமாகத் தெரியும். இவரிடமிருந்து உத்தரவுச் சீட்டுக்களை பெற்றிருக்கிறேன். ஆனால் இவ்வுத்தரவுச் சீட்டுகளுக்குப் பணம் வேண்டுவது வழக்கம். இதனை எனது ஆட்கள் ஆட்சேபித்துள்ளார்கள். சில வேளைகளில் பணம் கொடுப்பதைநிறுத்தி விட்டேன்.

சம்பவம் நடைபெற்ற தினத்தன்று எனது குடிசைக்கு வந்து கள்ளக்கடத்தல் பொருள் இருக்கிறதா எனச் சோதனைசெய்தார். நீங்கள் ஏன் இப்படிச் சோதனை செய்கிறீர்களென கேட்டபோது டி. ஆர். ஓ. உத்தரவின் பேரில்தான் செய்வதாகத் தெரிவித்தார். சோதனையிட்டு முடிந்ததும் அவர் என்னைப் பார்த்து "உனது மமதையை அடக்கித் தாறேன்" என்று சொல்லிவிட்டுப் போனார். தேடவரும்போது துப்பாக்கியுடனோ வேறு யாருடனோ வரவில்லை. நாங்கள் அவரைத் தாக்கியதென்பதும், பறித்ததென்பதுவும் முற்றிலும் பொய்.

வழக்காளிசார்பில் இளைப்பாறிய நமசிவாயம் ஆசிரியர் சாட்சியமளித்தபின் நீதிபதி தீர்ப்புக்கூறுவதை இம்மாதம் 18ந் தேதிக்கு ஒத்திவைத்தார்.

வழக்காளிக்காக ஊர்காவற்றுறைப் பொலிஸாருடன் வழக்கறிஞர் திரு. எஸ். வி. கதிரவேலு ஆஜரானார். எதிரிகள் சார்பில் அட்வக்கேட் திரு. ஆர். கண்ணுத்துரை வழக்கறிஞர் திரு. ஆர். விஸ்வநாதனின் அனுசரணையுடன் ஆஜரானார்.

## 23-ந் திகதிக்குப்பின் பேச்சு

பங்களூர், ஆக. 11
எல்லைப்பிரச்னை குறித்து மைசூர்-மகாராஷ்டிர முதல் மந்திரிகளின் இரண்டாவது சுற்றுப் பேச்சுக்கள் வருகிற 23-ந் திகதிக்குப்பின் நடைபெறும்.

## இன்னும் துருப்பு வேண்டுமாம்

ஹொனலுலு, ஆக. 11
வடவியட்னாமில் போரிட இன்னும் அதிக அமெரிக்கத் துருப்புகள் தேவையென, [illegible] கூறினார்.

## கிராம முன்னேற்ற சங்க தீர்மானம்

சுழிபுரம், வியா.
வடலியடைப்புக் கிராம முன்னேற்றச் சங்கத்தின் விசேஷ பொதுக் கூட்டம் சங்க முன்றலில் சங்க உபதலைவர் திரு. தா. சின்னத்துரை தலைமையில் நடைபெற்றது. பண்டத்தரிப்பு பட்டின சபையாவதால் தமது பகுதியிலுள்ள சில வட்டாரங்கள் பட்டின சபைப் பகுதியுடன் சேர்வதையும், அதனால் ஏற்படும் கஷ்டங்களை விளக்கியும் திருவாளர்கள் க. கணேசரத்தினம், வ. துரைரத்தினம், அ. வீரசிங்கம், க. இராசரத்தினம் ஆகியோர் பேசினர்.

பின்வரும் தீர்மானங்கள் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டு உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டன 1. சங்கானைக் கோவிற்பற்றில் உள்ள 13-ம், 14-ம், 15-ம் சுழிபுரம் கிராம சபை வட்டாரங்களை பண்டத்தரிப்பு கோவிற் பற்றுடன் சேர்ப்பதை இச்சபை வன்மையாகக் கண்டிக்கிறது. 2. பொருளாதாரம் மிகவும் குறைந்த வறிய மக்கள் வாழும் சுழிபுரம் கிராம சபையின் 13-ம், 14-ம், 15-ம் வட்டாரங்களாகிய எங்கள் பகுதியை பண்டத்தரிப்புடன் சேர்த்துப் பட்டினச் சபையாக்குவதை இச்சபை வன்மையாக எதிர்க்கிறது.

**REGAL—JAFFNA**
NOW SHOWING
Richard Chamberlain
Yvette Mimieux
in
**Joy in the Morning**
(M. G. M'S Color)

**ராஜா**
(யாழ்ப்பாணம்)
தினசரி 4-45, 7-00, 9-45
போயா தினங்களில் 4 காட்சிகள்
**Canadian Mounties**
vs
**Atomic Invaders**

## விளம்பரம்

### மனேஜர் தேவை

தையிட்டி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு மனேஜர் பதவிக்காய விண்ணப்பங்கள் கீழ்க்காணும் தராதரத்தை உடையவர்களிடமிருந்து கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் 25-8-66-க்குப் பிந்தாமல் பதிவுத்தபால் மூலம் காரியதரிசி, பலநோக்குக்கூட்டுறவுச் சங்கம், தையிட்டி, காங்கேசன்துறை என்னும் விலாசத்துக்கு அனுப்பப்பட வேண்டும்.

வயது:- 25 தொடக்கம் 35 வரை.

தராதரம்:- J. S. C. கூட்டுறவுப் பயிற்சி விரும்பத்தக்கது.

பிணை:- ரொக்கப்பிணை 1000/- ஆதனப்பிணை 2000/-

சம்பளம்:. 90/- (எல்லாம் உட்பட). 918

**வியாபாரம் பெருக விளம்பரம்செய்க**

**மகாத்மா தியேட்டர்**
(கரவெட்டி)
எஸ். எஸ். ஆர்.
விஜயகுமாரி
முதலியோர் நடித்த
"பூமாலை"

**நியூ காலிங்கன்**
(இணுவில்)
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறை தினங்களில் 2-30 மணி
எம்.ஜி.ஆர். - சரோஜாதேவி
நடித்த
**பணத்தோட்டம்**

**விரைவில் எதிர்பாருங்கள்!**

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கொம்பனித்தெரு)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (மட்டக்களப்பு) ஸ்ரீகிருஷ்ணா (திருமலை)
மொடேர்ண் (பண்டாரவளை) விஜிதா (ஹட்டன்)

**சிவாஜி, எஸ். எஸ். ஆர்.,**
எம். ஆர். ராதா, பாலையா, முத்துராமன்,
நாகேஷ், தேவிகா, புஷ்பலதா
மற்றும் பலர் நடித்த
பாரதமாதா பிக்சர்ஸ்

# பழநி

இசை: விஸ்வநாதன் ராமமூர்த்தி
திரைக்கதை - டைரக்ஷன் பீம்சிங்.

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
என். டி. ராமராவ் - அஞ்சலிதேவி நடித்த
**லவகுச**

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பிரிட்டிஷ் மந்திரி சபையில் திடீர் மாறுதல்

## உதவி பிரதமர் பிரௌன் புதிய வெளிநாட்டு மந்திரி!

### திரு. பௌடனுக்கு சாம்ராஜ்ய உறவு: ஸ்டூவர்ட் பொருளாதார மந்திரி

லண்டன், ஆக. 11

பிரிட்டிஷ் மந்திரி சபையில் தீவிர திடீர் மாற்றத்தைப் பிரதமர் வில்சன் நேற்று அறிவித்தார். இதன்படி உதவிப் பிரதமரான திரு. ஜார்ஜ் பிரௌன் வெளிநாட்டு மந்திரியாகிருர்.

இதுவரை வெளிநாட்டு மந்திரியாக இருந்த திரு. ஸ்டூவர்ட், பொருளாதார விவகாரத்திற்கான மந்திரியாகிருர்.

சாம்ராஜ்ய உறவு மந்திரியாக இதுவரை இருந்ததிரு. ஆர்தர் பொட்டம்லி வெளிநாட்டு அபிவிருத்தி மந்திரியாக நியமிக்கப்பட்டிருக்கிருர். திரு. பௌடன் சாம்ராஜ்ய உறவு மந்திரியாகிருர். திரு. கிரிம்மண்ட் உள்ளூராட்சி மந்திரி.

திரு. வில்சனின் திடீர் மந்திரிசபை சீர்திருத்தம் இங்குள்ள அரசியல் அவதானிகளை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது.

இதுவரை பொருளாதார மந்திரியாக இருந்த பிரௌனின் சமீபதிட்டம், ஏற்படுத்திய எதிரொலியே அவர் இப்பதவியிலிருந்து மாற்றப்பட்டதற்குக் காரணம் எனக் கூறப்படுகிறது. ஐரோப்பிய பொதுச்சந்தையில் பிரிட்டன் சேர்வதை பிரௌன் தீவிரமாக ஆதரிப்பவர். இப்போது வெளிநாட்டு மந்திரிப் பதவியுடன் முன்பு வகித்த உதவிப் பிரதமர் பதவியையும் பிரௌன் தொடர்ந்து வகிப்பார்.

மந்திரிசபையில் வேறு சில மாற்றங்கள் பின்பு இடம் பெறும் என்றும், மந்திரி சபைக்குள் இளைஞர்கள் அதிகமாகக் கொண்டு வரப்படுவார்கள் என்றும் பிரதமர் வில்சன் கூறினார்.

## தாய்லந்தில் யு. எஸ். தளங்கள்

பாங்காக், ஆக. 11

மிகப் பெரிய அமெரிக்க விமானத் தளமொன்றை தாய்லந்து பிரதமர் நேற்று திறந்துவைத்தார்.

விரைவில் 190 லட்சம் டாலர் செலவில் மற்றோர் கடற்படைத் தளத்தையும் அமெரிக்கா முடிக்கவிருக்கிறது. தென்கிழக்காசியாவிலேயே இதுதான் பெரிதாக இருக்கும் என அறிவிக்கப்பட்டது.

வியட்நாம்மீது குண்டு வீசும் அமெரிக்க பி 52 கனரக வெடிவிமானங்கள் இனி தாய்லந்து தளத்தையும் உபயோகிக்கும்.

## 4-ம் ஐந்தாண்டு திட்ட முதலீடு ரூ. 23,750 கோடி

### திட்டக் கமிஷன் ஏற்றது

புதுடில்லி, ஆக. 11

4-ம் ஐந்தாண்டுத் திட்டத்தின் வாசகத்தை நேற்று டில்லியில் கூடிய திட்டக்கமிஷன் முழுக்கூட்டம் 2 மணி நேர விவாதத்துக்குப் பின் ஏற்றுக்கொண்டது.

இம்மாதம் 20-ம் திகதி இது தேசிய அபிவிருத்தி சபையிடம்செல்லும். பின்பு பார்லிமெண்டில் சமர்ப்பிக்கப்படும்.

4-ம் ஐந்தாண்டுத் திட்டத்தின்மொத்தமுதலீடு இதன்படி 23,750 கோடி ரூபாவாகும் அரசாங்க முதலீடு 16,000 கோடி ரூ. தனியார் முதலீடு 7750 கோடிரூபா.

அரசாங்கத்துறை முதலீட்டில் மத்திய அரசாங்கம், ராஜ்ய அரசாங்கம் ஆகியவற்றின் பங்கு இன்னும் நிச்சயிக்கப்படவில்லை.

முந்திய மதிப்பீட்டின்படி வெளிநாட்டு உதவி 4400 கோடி ரூபா என அறிவிக்கப்பட்டது.

## அஸ்ஸாமிய நகரங்களில் காலித்தனங்கள்

### துப்பாக்கிக்கு 4 பேர்பலி; 117 பேருக்குகாயம்

புதுடில்லி, ஆக. 11

நேற்று ஷில்லாங்கில் காலித்தனத்திலிறங்கிய கூட்டத்தின் மீது பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் மொத்தம் 4 பேர் மாண்டனர். 117 பேர் காயமடைந்தனர்,

ராணுவம் அழைக்கப்பட்டபின் இப்போது நிலைமை கட்டுக்குள் அடங்கியிருப்பதாக அறிவிக்கப்பட்டது.

கடைக்குத் தீவைக்க முயன்ற கூட்டத்தினர் மீது துப்பாக்கிப் பிரயோகம் நடைபெற்றது.

ராணுவமும், பொலிசும் நகரில் ரோந்து சுற்றிவருகின்றன. 24 மணி நேர ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

சிப்சாகர் நகரில் பொலிசாருடன் ஆர்ப்பாட்டக்காரர்கள் கைகலந்தனர். இதனால் பலர் காயமுற்றனர். பலர் கைது செய்யப்பட்டனர்.

நௌகாங் பட்டினத்தில் கடைகள் சூறையாடப்பட்டன.

ஜோர்ஹாட்டில் எல்லா அரசியல் கட்சி பிரதிநிதிகளும் நேற்றுக்கூடி காலித்தனத்தைக் கண்டித்திருக்கிறார்கள்.

கௌஹாட்டியில் பொலிசார் ரோந்து சுற்றிவருகின்றனர்.

சீனு, பாகிஸ்தான் எல்லைகளால் சூழப்பட்ட எல்லை ராஜ்யமான அஸ்ஸாமில் காலித்தனம் இடம்பெறுவது குறித்து முதன் மந்திரி சாலிஹா கவலை தெரிவித்திருக்கிருர்.

## ராணுவ பலப் பெருக்கம்: இந்தியா-பாக். பரஸ்பரம் புகார்

ராவல்பிண்டி, ஆக. 11

நவீன ஆயுதங்களுடன் இந்தியா தனது ராணுவத்தைப் பெருக்கி வருவதாயும், விரைவில் பாகிஸ்தானுக்கு எதிராக 21 ராணுவ அணிகளை அது நிறுத்தவிருப்பதாயும், பாகிஸ்தானின் புதிய வெளிநாட்டுமந்திரி திரு. பீர்ஸடா கூறினார்.

பாகிஸ்தானின் ஆயுத பலம் குறித்து இந்திய பாதுகாப்புமந்திரி திரு சாவன் பார்லிமெண்டில் கூறியது ஆதாரமற்றது என்றும் அவர் கூறினார். இந்தியா அணுகுண்டு செய்வதற்கான அறிகுறிகள் தென்படுகிறது என மீண்டும் அவர் கர்ஜிதம் செய்தார்.

இதற்கிடையில், அமெரிக்க ராணுவ சாதனங்கள் இறுதியில் பாகிஸ்தானிடம் போகும் அபாயம் குறித்து கடந்த ஜூலை மாதம் முதல் இரு தடவைகளில் இந்தியா கவலை தெரிவித்திருப்பதாய் அமெரிக்க ராஜாங்க இலாகா அறிவித்திருக்கிறது.

அமெரிக்கா, பாகிஸ்தானுக்கு மீண்டும் ராணுவ உதவி அளித்தல், டில்லி—வாஷிங்டன் உறவு பாதிக்கப்படும் என இந்தியா திட்டவட்டமாக அறிவித்திருக்கிறதாம்.

படம் வரும்:

## சந்திரனில் 9 இறங்கு துறைகள்

கேப்கென்னடி, ஆக. 11

சந்திரனின் மறுபக்கத்தில் மனிதன் இறங்கும் 9 இடங்களைப் படம்பிடிக்கும்பொருட்டு வானக்கலம் ஒன்றை அமெரிக்கா நேற்று அனுப்பியது அடுத்த வியாழக்கிழமை முதல் அச்சந்திரனைச்சுற்றிவந்து 176 படங்களை அனுப்பும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## பாலம் இடிந்து 30 பேர் பலி

வெனிசூலா, ஆக. 11

வெனிசூலாவில் பாலம் ஒன்று இடிந்து விழுந்ததால் 30 பேர் மூழ்கிவிட்டனர். ஆற்றில் ஏற்பட்ட பெரு வெள்ளக் காட்சியைப் பார்த்துக்கொண்டிருந்த இவர்களிற்பலர் பாலத்தின்மேல் இருந்த தங்கள் கார்களுடன் மூழ்கினர்,

## தமிழ்நாட்டுச் செய்திகள்

### தளபதிக்கு வரவேற்பு

இந்திய ராணுவத் தளபதி ஜெனரல் குமாரமங்கலத்துக்கு சேலம் நகரசபை ஒரு வரவேற்பு அளித்தது.

ஃ ஃ ஃ

### செல்வாக்கைப் பெற

காமராஜரின் வெளிநாட்டுச் சுற்றுப்பிரயாணத்தின் மூலம் இழந்த செல்வாக்கை ஏற்படுத்தவே காங்கிரஸ் அவரை வெளிநாடுகளுக்கு அனுப்பியது என மு. கருணாநிதி சென்னைக் கூட்டம் ஒன்றில் பேசியபோது கூறினார்.

ஃ ஃ ஃ

### தடுக்கவேண்டாம்

"அரிசி மூட்டையுடன் லாரி வரும். தடுக்கவேண்டாம்" என அதிகாரிகளுக்கு கடிதம் எழுதி அதில் ரூ 100 நோட்டையும் வைத்திருந்தார் ஒருவர். தர்மபுரியில் இச்சம்பவம் நடைபெற்றது

ஃ ஃ ஃ

### ஒரே நாளில் 269 பேர்

தர்மபுரியைச் சேர்ந்த பரிகூரில் ஒரே டாக்டர் ஒரே நாளில் 269 பேர்களுக்கு கருத்தடை ஆபரேஷன் செய்தார்.

ஃ ஃ ஃ

### பாவாடை, தாவணி

15 வயதுக்குட்பட்ட ஹரிஜன மாணவிகளுக்கு பாவாடை, ரவிக்கை, தாவணி ஆகியவற்றை வழங்க அரசாங்கம் உத்தரவிட்டிருக்கிறது.

ஃ ஃ ஃ

### 9000 பேர் விண்ணப்பம்

தஞ்சை மாவட்டத்திலுள்ள அரசாங்க பெண்கள் பயிற்சிப்பள்ளிகளில் 180 இடங்களில்சேர 9000 மாணவிகள் விண்ணப்பித்திருக்கிறார்கள்.

ஃ ஃ ஃ

### 20 ஆயிரம் மோசடி

சென்னை நகரசபையில் ரூ. 20 ஆயிரம் மோசடி கண்டுபிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து 3 சிப்பந்திகள் தற்காலிகமாக வேலைநீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள்.

ஃ ஃ ஃ

### 'நாத்திகம்' வழக்கு

'நாத்திகம்' [illegible] மீது மு. கருணாநிதி (திமுக) தொடர்ந்துள்ள வழக்கு விசாரணை வருகிற 22-ம் திகதி பின்போடப்பட்டது. 'நாத்திகம்' பத்திரிகையில் வெளியாகியுள்ள ஒரு கட்டுரையை யொட்டி இந்தவழக்குத் தொடரப்பட்டது.

ஃ ஃ ஃ

### மகாலுக்கு சேதம்

சுமார் 300 ஆண்டுகளுக்கு முன் மதுரையில் கட்டப்பட்ட சரித்திரப் புகழ்பெற்ற திருமலைநாயக்கா மகால் கட்டிடத்தில் இடிந்து விழுந்தது. வேறு சில பகுதிகளில் வெடிப்பு ஏற்பட்டுள்ளதாம்.

ஃ ஃ ஃ

### பத்மினி

"முன்வைத்த காலைப் பின்வைக்க மாட்டேன்" என காங்கிரஸில் சேர்ந்ததற்கான காரணங்களை விளக்குகையில் நடிகை பத்மினி சென்னையில் கூறினார்.

ஃ ஃ ஃ

### 'சம்பளம் குறைப்பேன்'

தனது சம்பளத்தில் 10 சதவிகிதத்தைக் குறைத்துக் கொள்வதாக தமிழ்நாட்டு அட்வக்கேட்ஜெனரல் திரு. மோகன் குமாரமங்கலம் அறிவித்திருக்கிருர்.

தமிழ் நாட்டில்

## புராதன கோவில்களுக்கு "யுனெஸ்கோ" உதவி

### டிரஸ்டியின் நியமனத்துக்கு புதிய சிபார்சுகள்

சென்னை, ஆக. 11

அறநிலைய இலாகா புராதனச் சின்னங்கள் எல்லாவற்றையும் ஆராய்ந்து, ஸ்ரீரங்கம் ரங்கநாதர் கோவிலைப்போல் தகுதிவாய்ந்தவைகளுக்கு 'யுனஸ்கோ' உதவிபெறமுயற்சிக்கவேண்டுமென்று மதிப்பீடு கமிட்டி சிபார்சு செய்துள்ளது.

சிறப்ப முக்கியத்துவம் வாய்ந்த ஆலயங்களைப் பாதுகாக்க உத்தேசித்துள்ள சட்டத்தைச் சீக்கிரத்தில் இயற்றவேண்டுமென்று கமிட்டி கூறியுள்ளது

கமிட்டியின் அறிக்கை அசெம்பிளியில் தாக்கல் செய்யப்பட்டது. அதில் கூறப்பட்டுள்ள மற்ற முக்கிய சிபார்சுகளாவன:-

'ஒருவர் ஒரு பிராந்தியக் கமிட்டியில் அடுத்தடுத்து இரண்டு பதவிக்காலத்துக்கு மேல் இருக்கக்கூடாதென்று சட்டத்திலேயே வகைசெய்யவேண்டும். அடுத்தடுத்து இரண்டு பதவிக்காலத்துக்கு மேல் யாரையும் டிரஸ்டியாக நியமிக்கக் கூடாது. டிரஸ்டிகள் நியமனத்துக்கு மனுக்கோரும் தற்போதைய வழக்கத்தைக் கைவிடவேண்டும். அதற்குப் பதில், சமூகத்தின் மதிப்பும், மத நம்பிக்கையும், அம்மாதிரி சேவையில் ஆர்வம் உள்ளவராயும் இருப்போரை டிரஸ்டிகளாக நியமிக்கும் முறை வரவேண்டும். கோவில் நிலங்கள் போன்றவைகளுக்கு, ஒன்று எல்லா நிலச்சீர்திருத்தச் சட்டங்களிலிருந்தும் விலக்களிக்கவேண்டும் அல்லது அரசாங்கம் அந்த நிலங்களை எடுத்துக்கொண்டு கோவில்களுக்கு 'தஸ்திக்' மான்யம் கொடுத்துவர வேண்டும். 'மோகினி' பணம் சம்பந்தமான மாறுதல்களைக்குறித்து சீக்கிரம் முடிவுசெய்யவேண்டும். பழுதுபட்ட கோவில்களை உடனடியாக சரிவே செய்து, பழுதுபார்க்கவேண்டும், கோவில்களின் உபரி நிதியைப் பள்ளிக் குழந்தைகளின் மதிய உணவு, போன்றவைகளுக்குப் பயன்படுத்த வேண்டும். ராமேஸ்வரத்திற்கு உள்ளும் சுற்றிலும் அழகுபடுத்தி பூங்காக்கள் அமைத்து டூரிஸ்டுகளை வசீகரிக்கும்படி ஆக்கவேண்டும்.

## காமராஜ்-டிட்டோ சந்திப்பு

பிரியோனி, ஆக. 11

இந்திய காங்கிரஸ்தலைவர் காமராஜர் நேற்று பிரியோனிதீவில் யூகோஸ்லேவிய அதிபர் டிட்டோவுடன் பேச்சு நடத்தினார். வியட்நாம் சர்வதேச நிலைமை, டாஷ்கண்ட் பிரகடனத்திற்குப் பின்னுள்ள நிலைமை ஆகியனபற்றி அவர்கள் பேசினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

பிரார்த்தனையால் தீராத பிரச்சினைகளில்லை, தீராத துன்பங்களுமில்லை. பிரார்த்தனை என்பது நம் உள்ளிருக்கும் கடவுளுடன் நெருங்கிய உறவு கொள்வது. இதனால் கடவுளின் சக்தி நம்உடல் நரம்புகளில் பாய்ந்து, வியக்கத்தக்க பயன்களைச் செய்வதாகின்றது. —சுவாமி சிவானந்தர்.


# ஈழநாடு

EELANADU National Tamil Daily. Post Box 49 JAFFNA.
Telegrams : EELANADU Jaffna Telephone : 389

(வெள்ளிக்கிழமை பராபவ ஆண்டு ஆடி 27 ௳ 12-8-66)


## "சில நல்ல சகுனங்கள்"

கோடைக்கானலில் தடுப்புக்காவலில் உள்ள காஷ்மீரின் முன்னாள் பிரதமரான ஷேக் அப்துல்லாவை, சர்வோதயத்தலைவர் ஜெயபிரகாஷ் நாராயண் பன்முறை சந்தித்துப் பேச்சுவார்த்தைகள் நடத்தியுள்ளார். இதன் விபரங்களை அவர் தெரிவிக்க மறுத்தாலும், சம்பாஷணை காஷ்மீர்பிரச்னையைத் தீர்ப்பதற்காகவே இருக்கவேண்டுமென்பதில் ஐயமில்லை. இந்திய அரசாங்கத்தின் அனுமதியின்றேல் இப் பேச்சுகள் நடந்திருக்க முடியாது.

ஷேக் அப்துல்லாவுடன் பேசியபின், சென்னையில் ராஜாஜியுடனும் திரு. ஜெயப்பிரகாஷ் இதைப் பற்றிக் கலந்தாலோசித்துள்ளார். விபரம் பற்றி ராஜாஜி எதுவும் கூறமறுப்பினும், "பேச்சுகள் சிலர் நினைப்பதுபோல் அவ்வளவு நம்பிக்கையற்றதாக இல்லை. திருப்தியாகவேயுள்ளது" என்று பத்திரிகையாளரிடம் ராஜாஜி கூறியபோது ஆலயமணியும் அடித்தது. "பார்த்தீர்களா! மணி அடிக்கிறது இது ஒரு நல்ல சகுனம்" என்று அவர் கூறியது அர்த்தமில்லாதிருக்க முடியாது.

காஷ்மீர் பிரச்னையைப் பற்றிபேசுநடத்தவேண்டுமென்றும் இல்லாவிட்டால் தாஷ்கண்ட் ஒப்பந்தம் பற்றி இந்தியாவுடன் பேச்சுகள் நடத்த முடியாதென்றும் பாகிஸ்தான் அதிபர் அயூப்கான் கூறிவருகின்றார். ஆகவே காஷ்மீர் பிரச்னை சுமுகமாகத் தீராதவரை இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் நல்லுறவு ஏற்படுவது துர்லபம். இந்திய அரசாங்கம் இதை உணர்ந்து, அதைத் தீர்க்கும் முதற்படியாக, ஷேக் அப்துல்லாவுடன் பேச்சுகள் நடத்த அனுமதித்துள்ளதாக ஊகிப்பது தவறாகாது. இரண்டுபட்டுள்ள காஷ்மீரை மீண்டும் பிணைக்கவும், இந்தியா-பாகிஸ்தான் உறவுகளை மேம்படுத்தவும் இப்பேச்சுக்கள் உதவுமென்றே நம்புவோம். எப்படியும் இந்தப் பிரச்னை இனியும் நீடித்துக் கொண்டுபோக அனுமதிப்பது இருநாடுகளுக்கு மட்டுமன்றி, ஆசியாவின் அமைதிக்கேநல்லதாகாது.

தென்கிழக்கு ஆசியாவிலே இந்தோனேஷியாவுக்கும் மலேஸியாவுக்கும் ஏற்பட்டிருந்த "போராட்ட நிலை"யை இருதேசத் தலைவர்களும் நேரில் கூடிப்பேசி, நேற்றுமுடித்துக்கொண்டுள்ளது, மற்றொரு "நல்ல சகுன"மாகும். இத் தலையங்கத்தை எழுதுகையில், இந்த ஒப்பந்தத்தின் விபரங்கள் வெளியாகவில்லை. என்றாலும் புதிதாக விடுதலையடைந்த இரு தேச மக்களும் போராட்டம் முடிவுபெற்றது பற்றி மகிழ்ச்சியடைவரென்பதில் சந்தேகமேயில்லை.

பொதுமக்கள் அனைவரும் எந்தநாட்டிலும் அமைதியையே விரும்புகின்றார்கள். சிறப்பாக புதிதாக விடுதலையடைந்த ஆசிய, ஆபிரிக்க நாட்டு மக்களுக்கு அமைதியே மற்றெதையும்விட, மிகமிக அவசியம். ஏனெனில் அமைதி இருந்தால்தான் நாடு முன்னேறவும் நாட்டு மக்களின் குறைகள் தீரவும் வழிபிறக்க முடியும். ஆனால் துரதிருஷ்டவசமாக புதிதாக விடுதலையடைந்த நாட்டு மக்கள் அமைதியாக முன்னேறமுடியாதபடி உள்நாட்டு வெளிநாட்டுஆபத்துகள் பயமுறுத்தி சிர்குலைப்பதைப் பார்க்கிறோம்.

இந்த ஆபத்துக்களைக் கிளப்பிவிடவும், வளர்க்கவும் வெளிச்சக்திகள்பல விஷமம் செய்வதாகச் சொல்லப்படுகின்றது.

ஆசிய நாடுகளை திசைவாரியாகவோ, மதவாரியாகவோ, மொழிவாரியாகவோ, பிளவுபடுத்தி, அவர்களிடை ஒற்றுமையோ, அமைதியோ இல்லாமல் செய்து, அவர்களை முன்னேறவிடாமல் தடுக்கவேண்டுமென்பதே சிலவல்லரசுகளின் நோக்கமென்றும் இருதரப்பினருக்கும் ஆயுதம் முதலிய உதவிகளை அளித்து, ஆசியாவிலே யுத்தத் தீ எப்பொழுதும்எரிந்துகொண்டிருக்க கூடுமானதைச் செய்வதாயும் கூறப்படுகிறது.

இக்குற்றச்சாட்டு எவ்வளவுதூரம் உண்மையாயினும்சரி புதிதாக விடுதலை பெற்ற ஆசியா மக்கள் சென்ற சிலவருட அனுபவங்களினால் நல்லறிவுபெற்று தங்களிடை ஏற்பட்டுள்ளசச்சரவுகளை தீர்த்துக்கொண்டு அமைதியாகவும் பரஸ்பர உதவியுடனும்வாழவேண்டிய அவசியத்தை சமீபகாலமாக அதிகம் உணர்ந்து வருகின்றனர். இது நம் இலங்கைக்கும் பொருந்தும். நம் நாடு விடுதலையடைந்து 18 வருடங்களுக்கு மேலாகியும், பொருளாதாரத்தில் நாம் முன்னேற்றமடைய முடியாததற்கும் காரணம், நம்மிடையே ஒற்றுமையும் ஒத்துழைப்பும்இல்லாததுதான். வெளி உதவிகளை நம்பி நாம் வாழ்வது நல்லதல்ல. வெளியார் நிபந்தனையின்றி நமக்கு உதவி செய்ய மாட்டார்கள். நமது மூலப்பொருள்களுக்கு நியாயமான விலை கொடுத்து வாங்கிக் கொண்டால் அதுவே அவர்கள் நமக்குச் செய்யக்கூடிய மேலான உதவியாகும். ஆனால் நம்மூலப்பொருள்களின் விலைகள் குறைந்து, இறக்குமதி செய்யும் விலையும் கூடியும் வருவதாக, நமது அமைச்சர்கள் பலமான எச்சரிக்கை செய்துள்ளனர். இதனால் செலாவணிச் சங்கடங்கள் அதிகரிக்கின்றன. நாம் பொருளாதாரத்தில் முன்னேறமுடியாதபடி. அனுதாபமற்ற வெளிச்சக்திகள் தடுக்கின்றன.

இந்த அவலநிலை மாற ஆசியா நாடுகள் முதலில் தங்கள் நாடுகளிலுள்ள பிரச்னைகளை சுமுகமாகத் தீர்த்துக் கொள்ளுவதுடன், தங்களுக்கிடையே பரஸ்பரம் ஒத்துழைக்கவும், வெளிஉதவிகளை அதிகம் நம்பி வாழாமலும் இருப்பது பலவிதங்களிலும் நல்லது. இதற்கு ஆரம்பமாக சில நல்ல சகுனங்கள் தோன்றியுள்ளது [illegible]

# குமரன் திருவிளையாடல் போதிக்கும் பேருண்மைகள்

— ஸ்ரீ சுவாமி சிதானந்தர் —

முருகக்கடவுளின் திருவவதாரமும் திருவிளையாடல்களும் மெய்ப்பொருள் நாட்டங்கொண்ட ஆன்மீக சாதகர்களுக்கு ஆழ்ந்த கருத்துக்கள் பொதிந்த பேருண்மைகளைப் போதிக்கின்றன. ஆன்மீகப் பாதையிலே முன்னேறிச் செல்வதற்கான நெறிமுறைகளை அவை எடுத்துக்காட்டுகின்றன. மகான்களின் வாழ்க்கையே ஞானநூல்களின் விளக்கமாக அமைந்திருப்பதைப் போல, இறைவனுடைய திருவவதாரங்களும், திருவிளையாடல்களும், ஆன்மீக சாதனைகளையும் அனுபூதி நிலையையும் பற்றிய தத்துவங்களைத் தெளிவாக விளக்கிக்காட்டுவனவாயுள்ளன. அவற்றின் உண்மைக்கருத்துக்களை அறிந்துகொள்வது ஆன்மீக சாதகர்ளுக்குப் பெரும் பயன் அளிக்கவல்லது.

முருகக்கடவுளின் திருவவதாரத்துக்கு இவ்வுண்மை சிறப்பாகப் பொருந்தும். ஏனெனில் ஆறுமுகக்கடவுளின் தோற்றமும் திருவிளையாடல்களும் முழுவதும் ஆன்மீக மார்க்கத்தை விளக்குகின்றன என்று கூறலாம். அவை சிவத்துவத்திலிருந்து சிவத்துவத்துக்கு இட்டுச் செல்லும் இந்த மார்க்கத்தின் மிக முக்கியமான உண்மைகளையும் விதிகளையும், தேவையான யோக்கியதாம்சங்களையும், அபிவிருத்தி நிலைகளையும் சாதகனுக்கு எடுத்துக்காட்டுகின்றன. தனிப்பட்ட ஒவ்வொரு சீவனின் ப்ரகிருதியிலும் அவித்தைக்கும் ஞானத்துக்குமிடையேநடைபெறும் போராட்டத்தையும், அசுரசக்திகளுக்கும் தெய்வீக சக்திகளுக்குமிடையே நடைபெறும் போராட்டத்தையும், இவ்விடையற்ற போராட்டங்களின் முடிவையும், தெய்வீக சக்திகளின் இறுதிவெற்றியையும்குமரக் கடவுளின் திருவிளையாடல்கள் சிறந்த முறையில் விளக்குகின்றன.

### அடிப்படைத் தேவை

மெய்ப்பொருளிலே நாட்டங்கொண்டவர்கள் முதன் முதலில் உணரவேண்டிய உண்மைஒன்றுண்டு. போரின் வெற்றிக்குக் காரணமாய் இருந்த திருவருட்சக்தி தேவர்களுக்கே உதவியது. அவர்கள் திருவருளைப்பெற தகுதியுடையவர்களாக இருந்ததாலேயே அவர்களால் அதனைப்பெறமுடிந்தது. அவர்கள் தேவர்களாக இருந்தமையாலேதான் அவர்களால் இறைவனை அணுகி அவனது அருளை வேண்ட முடிந்தது. எனவே நாம் எதிர்த்துப் போராட வேண்டியிருக்கும். தீயசக்திகளை வெல்வதற்குத்தேவையான பலமும் உதவியும் எமக்கு அளிக்கவல்லவரை நாம் அணுகவேண்டுமாயின், நாம் அதற்கு ஏற்ற அதிகாரிகளாக - தெய்வீக சம்பத்துக்களை உடையவர்களாக இருக்கவேண்டும். இத் தகுதியைப் பெறுவதற்குச் சாதன சதுஷ்டயம் (விவேகம், வைராக்கியம் முதலியன) யம- நியமம் (அஹிம்சை, சத்தியம் முதலியன), சதாசாரம் (நல்லொழுக்கம்) போன்ற நெறிகளை ஆன்றோர் எமக்கு வகுத்துள்ளனர். ஆன்மீகப்பாதையிற் காலடி எடுத்து வைக்க விரும்பும் ஒவ்வொரு சாதகனும் முதலில் இவற்றை வளர்க்க முயல்வது இன்றியமையாததாகும்.

### குருவே ஸ்கந்த சக்தி

எம்மிடமுள்ள தீயசக்திகளுடன் நாம் புரியும் போரில் எமக்கு வழிகாட்டி, உதவி புரிந்து வெற்றிபெறச் செய்யும் குரு முருகக்கடவுளின் அம்சமே என்பதை உணர வேண்டும். அவர் ஸ்கந்த சக்தியின் திருவுருவம். உலகின் சாதனசக்தி அல்லது யோகசக்தி அனைத்தும் திரண்ட திருவடிவே முருகக் கடவுள். அச்சக்தியின் மூலமே ஒருவர் அஞ்ஞானமாகிய இருண்ட சக்திகளை முற்றிலும் வென்று மெய்ஞானம் பெறமுடியும். முருகக்கடவுளின் திருவவதாரத்திலே விளக்கப்பட்டுள்ள நியதிப்படி சாதகனது ஆன்மீக வாழ்க்கையில் அவரே குருவின் உருவிலே தோன்றி அவனை ஆட்கொள்கிறார் தன்னைத் தாய்மையாக்கிக்கொண்டு அக் குருவை அடைந்து, அவரது கருணையைப்பெற முயல்வதற்குத் தகுதிபெற்ற சாதகனையே திருவவதாரத்தில் வரும் தேவர்கள் குறிக்கின்றனர்.

### திருவருளைப் பெறுவதற்கான தகுதி

தேவர்கள் ஆரம்பத்திலேயே இறைவனிடம் சென்று "பிரபு நாங்களும் அசுரர்களும் போர்புரிய வேண்டியுள்ளது. இதில் நாங்கள் வெற்றிபெற விரும்புகிறோம். எனவே எங்களுக்கு உதவவேண்டும்" என்று கேட்கவில்லை. முதலாவது தாங்கள் எதிர்க்க வேண்டிய சக்தி ஒன்றுள்ளது என்பதையும் அச்சக்தி தங்கள் இயல்புக்கு விரோதமானது— வெற்றி கொள்ளப்படவேண்டியது என்பதையும் உணர்ந்தார்கள். உணர்ந்து அதனை எதிர்த்துப் போராடினர். இவை இரு நியதிகளை எமக்கு அறிவுறுத்துகின்றன. முதலாவது, தீய சக்திகள் அல்லது கீழான தன்மைகள் எம்மிடம் உள்ளனஎன்பதையும், அவை எம்மினின்றும் வேறானவையாய் எமது பிரகிருதியிலுள்ள விரும்பத்தகாத - எதிர்க்கவேண்டிய அம்சம் என்பதையும் உணர வேண்டும். இரண்டாவதாக இங்ஙனம் உணர்வதோடு நின்றுவிடாது, அவற்றை அகற்ற முழுமூச்சுடன் முயற்சி செய்யவேண்டும். நாம் இங்ஙனம் உளப்பூர்வமாக முயன்று, உண்மையாக உழைத்தாலன்றித் திருவருளைப்பெறத் தகுதியுடையவர்கள் ஆகமாட்டோம்.

இவ்விதியைப் பெரும்பாலான சாதகர்கள் புறக்கணிக்கப் பார்க்கின்றனர். ஏனெனில் இந்நியதியை ஏற்பது மனத்துக்கு உகந்ததன்று. எம்மிடமுள்ள கீழான தன்மை இந்த உண்மையை ஏற்கவிடாது. ஆன்மீக வாழ்க்கையின் ஆரம்பத்

(5-ம் பக்கம் பார்க்க)

(5-ம் கலத் தொடர்ச்சி)

புண்ணியமும் நன்னெறியும் ஆவதெல்லாம் நெஞ்சமே யிதுகண்டாய் பொருந்தக்கேள்நீ, நுண்ணிய வெண்நூல் கிடந்த மார்பா என்றும் நுந்தாத வெண்சுடரேயென்று நாளும், விண்ணியங்கு தேவர்களும் வேதம் நான்கும் விரைமலர் மேல் நான்முகனும் மாலுங்கூடி, எண்ணரிய திருநாமமுடையாயென்றும் எழிலாரூராவென்றே ஏத்தா நில்லே.

—அப்பர் சுவாமிகள்

# ஐயாறன் எழுதுகிறது

கதிர்காமத்தில் தீவிபத்து ஏற்பட்டதே, காரணம் என்ன? முருகனுக்கு யார் மீதாவது கோபமா?- என்று ஓரன்பர் கேட்கின்றார்.

கதிர்காம தரிசனம்செய்துவிட்டு, கொழும்புக்கு ஓர் அன்பருடன் பஸ் ஏறினேன். பஸ் புறப்பட 10 நிமிஷம் தானுள்ளது. ஆற்றுக்கு வடகரையிலிருந்து புகை மண்டலங்கள் எழும்பின. தீயும் வெகு உயரக் கிளம்பியது. ஒலிபெருக்கிகள் நெருங்கி வரவேண்டாம் என்று மக்களை எச்சரிக்கை செய்தன. கடும் வெயில்.

தபாலாபீஸும், பொலிஸ் ஸ்டேஷனும எரிவதாக நேரில் பார்த்துவிட்டு வந்தவர்கள் சொன்னார்கள். மக்களுக்கெல்லாம் பெருங்கிலி.

கருணைகூர் முகங்களாறும் கொண்ட முருகனுக்குக் கோபம்வரும்படி ஏதும் நடந்துவிட்டதா? பலரும் பலவிதமாகக் கதைத்தனர். கதிர்காமத்திலே பொலிஸ் படையைச் சேர்ந்த சிலர் எதேச்சாதிகார தர்பார் நடத்துவதாயும், சில சாதுக்களை வீண் இம்சைப் படுத்தியதாயும் கேள்விப்பட்டேன் சாதுக்களின் மனம் புண்பட்டால் தெய்வமும் சகிக்குமா? மேலும் சில சாதுகளுக்குள்ளாகவே சச்சரவாம்! வழக்கு பொலிஸுக்கும் போய்விட்டதைக் கேட்க வெட்கமும் துக்கமுமாக இருந்தது!

ஃ ஃ ஃ

நமது மணிபாகவதர்- இனி அவரைஅப்படிஅழைப்பது தவறு ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தம்பிரான் சுவாமிகள் என்றே கூறவேண்டும்- அவர் துறவுபெற்ற செய்தியைக் கேட்டுஓரன்பர் மிக மகிழ்ச்சியும் பெருமையும் தெரிவித்தார் ஓர் அந்தணர் தம்பிரானாவது இதுவேமுதல் தடவையென்றும், அவர் இலங்கை வந்து நல்லசேவை செய்யலாமென்றும் தெரிவித்தார்.

இப்புதுப் பெயர் அவருக்கு எப்படி வைக்கப்பட்டது தெரியுமா? "முருகனே நமக்குச் சூட்டியுள்ளான்" என்று எழுதுகிறார் அவர். "நேற்று (6ந் தேதி) இரவு 6 பெயர்களை எழுதி மதுரை ஆதீனத்திலே பூஜைமுகத்தில் கணபதி அவர்களால் (கொழும்பு பிரபல வர்த்தகரும், கூட்டுப்பிரார்த்தனைக்காரரும்) போடப்பட்டு குருமகா சன்னிதானம் அவர்களால் திருவுளச் சீட்டிழுப்பு மூலம் இத்திருநாமம் கிடைத்தது நமது யோக குருநாதன் கூறுவது போல "எல்லாம் எப்பவோ முடிந்த காரியம்..."

23ந் தேதி அநேகமாக ஸ்ரீலஸ்ரீ தம்பிரான் சுவாமிகள் யாழ்ப்பாணம் திரும்புகிறார். தம்மை முற்றிலும் இறைபணிக்கு அர்ப்பணித்துக்கொண்டு துறவுக் கோலத்தில் வருபவரை விசேஷ மரியாதையுடன் வரவேற்க ஈழத்திலுள்ள சைவஸ்தாபனங்களும் பெருமக்களும் ஒழுங்குசெய்வராவென்று ஓரன்பர் கேட்கின்றார்.

நம்மைச் சேர்ந்த ஒருவர் மதுரைசென்று சைவ ஆதீன முறைப்படி துறவியாகி இங்கு தெய்வீகப்பணி செய்யவருவது இதுவே முதன்முறையாகும். அப்படி வருபவரைத் தக்கபடி வரவேற்று உபசரித்து வேண்டுவன செய்வதே சிறப்பாகச் சைவ சமூகத்துக்கு அழகும் கடமையுமாகும்.

(4-ம் கலம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் எதிரியும் சிறுவனும் கிணற்றடியில் நின்றனர்

## கோதபாயா கொலை வழக்கில் சிறுவன் சாட்சியம்

கொழும்பு, வெள்ளி

தானும் சுனில் குணதிலகவும் தேவாலய வளவில் சென்ற பெப்ரவரி 7-ந் திகதியன்று நிற்கும்போது முதலாவது எதிரியாகிய போலின் டி. குருசுன் ஒரு பையன் கிணற்றருகே நிற்பதைத்தான்கண்டதாக இரத்மலானை சென்ற் ரீதா பள்ளிக்கூட மாணவனான 11 வயது லியோனுட் ஏர்ள் குணசேகரா கோதபயா கிரம்பகந்த கொலைவழக்கில் சாட்சியளிக்கையில் கூறினுன்,

"அந்தச் சமயம் முதலாம் எதிரி ஒரு பச்சைநிற கவுண் அணிந்திருந்தார். அவருடன் தன்னிலும் பார்க்கச் சிறிதளவுபெரிதான பையன் இருந்தான். அவர் நீலநிறக் காற்சட்டையும், வெள்ளைச் சேட்டும் அணிந்திருந்தார்",

நேற்றுமுன்தினம் கொழும்புதெற்கு நீதவான் திரு சிவா செல்லையா முன் இவ்வழக்கு விசாரணைக்கெடுக்கப்பட்டபொழுது, சிறுவன் குணசேகரா மேற்கண்டவாறு கூறினுன்.

போலின் டி குருசின் வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க எதிர்க் கூண்டுக்குக்கீழே போலினுக்கு ஆசனம் அளிக்கப்பட்டிருந்தது. அவர் பாவாடையும் சட்டையும் அணிந்திருந்தார். கொலருடன் கூடிய சட்டையுடன், சிவப்பு, வெள்ளை, மஞ்சள் பொட்டுகளுள்ள கத்தப்பாவாடை எடுப்பாக அமைந்திருந்தது.

அவருடையகூந்தல்தோள்களின்மீது தவழ்ந்தது. ஒருசோடி காதணிகளும் காப்பும், கைக்கடிகாரமும் அணிந்திருந்தார். அவரது காலணிகளின் வார்கள் பலநிறமுடையனவாக இருந்தன. உதட்டில் மெல்லிய சாயம் பூசியிருந்தார்.

விசாரணையின் பெரும் பகுதியும் அவர் தலைகுனிந்தவாறு, தனது கைக்குட்டையில் பொருத்தப்பட்டிருந்த மதச் சின்னமொன்றை வருடிக்கொண்டிருந்தார்

பெப்ரவரி 7-ந் திகதி நடந்த சம்பவங்களைப்பற்றிக் கூறுகையில், சிறுவன் குணசேகரா, தானும் தனது நண்பன் சுனிலும் தேவாலய வளவில் நிற்கையில், முதலாம்எதிரி அங்குள்ள கிணற்றின் அருகில் நின்றதாகவும், அவருடன் இருந்த சிறுவன் கிணற்றுக்கட்டில் சாய்ந்தவண்ணம் நின்றதாகவும் கூறினுன்.

முதலாம்எதிரி தன்னுடன் பேசியதாகவும், அக்கிணறு ஆழமானதா என்றும், அதிலிருந்து ஆட்கள் தண்ணீர் குடிப்பதா என்றும் தன்னைக் கேட்டதாகவும் குணசேகரா கூறினுன். தான் அதற்கு ஆமென்று கூறிவிட்டு, வாளி ஒன்று கொண்டுவருவதாவென அவரைக் கேட்டதாகவும், அவர் தேவையில்லை என்றுகூறினுரென்றும் குணசேகரா மேலும் தனது சாட்சியத்தில் தெரிவித்தான்.

சிலநாட்களுக்குப் பின் கிணற்றில்கண்டுபிடிக்கப்பட்டதாக ஒருசிறுவனின்படம்பத்திரிகைகளில் இருந்ததைத் தான் கண்டதாகவும், அப்படத்திலிருந்தசிறுவன் தான் முதலாம் எதிரியுடன் பெப்ரவரி 7-ல் கண்ட சிறுவன் என்பதைத்தான் அடையாளங் கண்டுகொண்டதாகவும் சிறுவன் குணசேகரா தொடர்ந்து சாட்சியமளித்தான்,

வேறும் சில சாட்சியங்களின் விசாரணைக்குப் பின் வழக்கு ஆகஸ்ட் 16, 19-ம் திகதிகளுக்கு ஒத்திவைக்கப்பட்டது.

இறந்த சிறுவனின் தந்தையும், 2-வது எதிரியுமான மதிபால கிரம்தகந்தம் வெள்ளை நீட்டுக்காற் சட்டையும் காவிநிறக்கோட்டும் அணிந்திருந்தார். அத்துடன் கடுங் காவி நிற டையும் அணிந்திருந்தார். அவருக்கும் எதிரிக்கூண்டில் ஆசனம்கொடுக்கப்பட்டிருந்தது.

---

# கொலை வழக்கில் இரு எதிரிகள் விடுதலை

மாவிட்டபுரம், வியா.

தெல்லிப்பழை கிழக்கை சேர்ந்த முதலி சின்னவன் என்பவரை சென்ற ஏப்ரல் மாதம் 7-ம திகதி கொலை செய்ததாகவும் தெல்லிப்பழை கிழக்கில் பயங்கர ஆயுதங்களுடன் சட்ட விரோதமாகக் கூட்டம் கூடியதாகவும், கலகம் விளைவித்ததாகவும் தெல்லிப்பழையைச் சேர்ந்தவர்களான ஆண்டிமுதலி, நீலன் முருகன், ஆண்டிகதிரன், நாகன் மாதன், ஆண்டி சடையன், ஆண்டி ஆறுன் ஆகிய ஆறுபேர் மேலும் சுன்னுகம் பொலிசாரால் குற்றம் சாட்டித் தொடரப்பட்ட வழக்கு மல்லாகம நீதிபதி திரு. டி. எஸ் நிற்சிங்கா முன்னிலையில் தொடர்ந்து விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட பொழுது இருதரப்பு வழக்கறிஞர்களும் தொகுப்புரை நிகழ்த்தினுர்கள்,

தொகுப்புரையைத் தொடர்ந்து நீதிபதி 5-ம் 6-ம் எதிரிகளான ஆண்டி சடையன், ஆண்டி ஆறுன் ஆகிய இருவரையும் விடுதலை செய்து முதல் நாலு எதிரிகளையும் சுப்பிரீம் கோர்ட் விசாரணைக்கு நிற்கும் படியும் அவர்களின் கைவிரல் அடையாளங்களை பதிவு செய்த பின் தொடர்ந்து சிமாண்டில் வைக்கும்படியும் உத்தரவிட்டார்.

எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. ஆர். ஜே. செல்வரத்தினத்தின் அனுசரணையுடன் திரு. வி. எ. நவரத்தினம் ஆஜராணுர். பொலிஸ் தரப்பில் சுன்னுகம் பொலிஸ் இன்ஸ்பெட்டர் திரு ஜோர்ஜி வீரசூரியாவின் உதவியுடன் திரு வி. செல்லத்துரை ஆஜராணுர்.

---

# மந்திரி 'திரு' சங்கானைக்கு விஜயம்

சங்கானை, வியா.

சங்கானைப் பட்டின சபையின் அழைப்பை ஏற்று உள்ளூராட்சி அமைச்சர் திரு. எம். திருச்செல்வம் இம்மாதம் 19-ம் திகதி பட்டின சபைக்கு விஜயம் செய்யவிருக்கிறுர்.

பட்டின சபையின் மின்சார, சுகாதார, போக்குவரத்து அபிவிருத்திகள் சம்பந்தமான விஷயங்கள் அமைச்சரின் கவனத்துக்கு கொண்டுவரப் படவிருப்பதாக அறியப்படுகிறது.

நீண்ட காலமாக வரியிறுப்பாளர்களுக்கு ஏற்பட்டு வரும் பல முக்கிய பிரச்சினைகள் சுமுகமாகத்தீர்ப்பதற்கு மந்திரி ஆலோசனை நடத்துவாரெனவும் தெரிகிறது.

பட்டினசபையின் இரண்டாவது கட்ட மின்சார விநியோகத்தை அமைச்சர் அன்று ஆரம்பித்து வைப்பார்.

---

# குமரன் திருவிளை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தில் இக்கீழான தன்மையின் ஆதிக்கத்திலேயே சாதகன் இருக்கிறுன். மெய்ப்பொருளில் நாட்டமும் உளப் பூர்வமான ஆர்வமுங் கூட அவனிடம்இருக்கலாம். ஆனுல் எல்லாம் கொள்கையளவிலேயே இருக்கும். மனிதனது கீழ்த்தன்மையின் பிரதான அம்சமான தமோகுணம் அவனை இத்துறையிலே பாடுபட்டு உழைக்கவிடாது. ராஜச அம்சமான முயற்சியின் மூலம் இந்த ஆரம்பத் தடையைத் தகர்த்தெறிந்தாலன்றி எமக்கு உய்வில்லை முதலிலே தாமச குணத்தை ரஜோகுணத்தால் வெல்ல வேண்டும் ஒவ்வொருவருள்ளும் இருக்கும் இச்செயற் சக்தியை சுயநலக் காரியங்களிலிருந்து ஆன்மீக இலட்சியத்தை அடைதற்கான போராட்டத்திலே திருப்ப வேண்டும். இதுவேஎம்மைத் தெய்வீகத்தன்மையுடையவர்களாயும் சாத்வீகம்கூடியவர்களாயும் இறைவனருளைப்பெறத் தகுதிவாய்ந்தவர்களாயும் ஆக்கிவிடும்.

இதுஎவ்வளவு கஷ்டமானதாயிருந்தாலும் செய்தே தீரவேண்டியுள்ளது. இன்றேல் சாதனையின் அடுத்த படியை அடையமுடியாது. இவ்விதியை வலியுறுத்துதற்காகவே, தேவர்கள் - ஒரு முறை. இருமுறையல்ல-பலமுறை அசுரர்களுடன் போரிட்டதாகக் கூறப்படுகின்றது. தீயசக்திகளை வெல்ல உண்மையாகவே முயன்றும் முடியவில்லை என்று கண்ட தேவர்கள் பரம்பொருளை நோக்கி அவரது திருவருளை வேண்டிப் பிரார்த்தித்தனர். முற்கூறப்பட்ட நிபந்தனைகள் நிறைவேற்றப்படும்வரை பிரார்த்தனை பூரண பலனளிக்காது; சாதன சக்தியின் விளைவைச் சாதகன் தன்னுள்ளே பூரணமாக உணரமுடியாது; அகத்தே உண்மையான ஆன்மீக மலர்ச்சி ஏற்படாது. அந்த நிபந்தனைகள் நிறைவேற்றப்பட்டால், சாதகன் ஆன்மீகப் போரின் அடுத்தபடிக்குச் செல்லத் தயாராகிறுன்.

## தீட்சை

அஞ்ஞானமாகிய பேரிருளில் அமிழ்ந்து பேருறக்கத்திலிருக்கும் சிவனைத் தட்டியெழுப்பும் சாதனசக்தி குருவின் திட்சை மூலம் பெறப்படுகின்றது. குறிப்பிட்ட ஒரு மந்திரத்தைக் காதில் ஓதியோ, சஞ்சாரத்தின் மூலமோ, வேறுபுறக் கிரியைகளாலோ தான் தீட்சை அளிக்கப்படவேண்டும் என்பதில்லை. குருவின் ஒரு பார்வை, சொல், ஓர் எண்ணம் இவற்றுலும் தீட்சை அளிக்கப்படலாம். தீட்சை மூலம் சாதனசக்தி சாதகனு-புகுந்து, அங்கு உறைந்துசெயற்படும் அதிசய முறைகுருவுக்குமட்டுமே தெரியும். அனுபூதியடைந்தவர்களே அதனை அறிவர். ஆனுல் ஒன்றுமட்டும்உறுதி: உள்ளே உறங்கிக்கிடக்கும் தெய்வீக சக்தியை விழிப்புறச்செய்து. பூரணத்துவநிலைக்கு இட்டுச்செல்லும் பாதையில் அதைச்செலுத்துவதற்கு, ஸ்கந்த தத்துவத்தின் (அதாவது இறைவனது திடுவருட் சக்தியின்) காணக்கூடிய உருவமாக இத்தூல உலகிலேதோன்றும் சத்குருவினுலேதான் சாத்தியமாகும்.

## பிரார்த்தனையின் தத்துவம்

ஆன்மீக முன்னேற்றம் தொடக்கத்திலிருந்து முடிவுவரை உளப்பூர்வமான சாதனையாலேயே அதாவது பயிற்சியினுலேயே ஏற்படுகின்றது. அயராத அப்பியாசத்தைத் தவிர வேறு மார்க்கமில்லை. ஒருவருக்கு மேன் [illegible] இறையும் [illegible] பாவும் ஆகியவை இருக்கலாம். ஆனுல் இவையனைத்தும் அனுபவபூர்வமாகச் செயற்படுத்தப்பட்டாலன்றிப் பலனேற்படாது. அப்பியாசமே ஆன்மீக வாழ்க்கையின் திறவுகோல் அப்பியாசமின்றி அனுபூதியில்லை.

---

சினிமா விமர்சனம்

# திருவிளையாடல்

நாரதர் கொண்டுவந்த ஞானப்பழத்தை பெறுவதற்கு நடைபெற்றபோட்டியில் விநாயகர் வெற்றி பெறுகிறுர். இதனுல்போட்டியில் தோல்வியுற்ற இளையவரான சுப்பிரமணியன் பழனி மலையில் சென்று தவங்கிடக்கிறுர். ஒளவையார் கூறிய ஆறுதல் மொழிகளும் அவரை சாந்தப்படுத்தவில்லை. கடைசியில் தாயாரான உமாதேவியார் சென்று, அன்புடன் பேசி அவரின் தந்தையாரான சிவனின் திருவிளையாடல்களை ஒவ்வொன்ருக எடுத்துக்கூறி சமாதானப்படுத்துகிறுர். இவற்றில் சில திருவிளையாடல்களை குளுகுளு கலரில் ஏ. பி. நாகராசன் நமக்கு விருந்தாக புதிய மெருகுடன் அளிக்கின்றுர்.

சிவனுக வருபவர் நடிகர் திலகம்தான். அவரது நடிப்பு, சிவன் ரூபத்திலும் பார்க்க மீனவனுகவும் விறகு வெட்டியாகவும் வரும் போதும், நக்கிரன் முன் புலவராக தோன்றும் போதும் அபாரமாக இருக்கின்றது! ஒளியின் நுணுக்கத்தினுலும், டைரக்ஷனின் திறமையாலும் பின்னணி இசையினுலும் சிவனின் தாண்டவ நடனம் அற்புதமாக காட்சியளிக்கிறது.

உமாதேவியாக வருபவர் நடிகையர் திலகமாக இருந்தாலும் அவரது நடிப்பு அதிகம் சோபிக்கவில்லை. கடற்கரையில் மீசை வேடத்தில் வரும் சிவாஜியும், மீனவ பெண்ணுக வரும் சாவித்திரியும், மிக மிக நெருங்கி நடிக்கிறுர்கள். சமயசம்பந்தமான திரைப்படங்களில் இதுபோன்ற விஷயங்களில் கண்ணியம் இருப்பது அவசியம்.

ஒளவையாராகவரும் கே. பி. சுந்தராம்பாளின்பாடல்களும், புலவராகவரும் டி. ஆர் மகாலிங்கத்தின்பாடல்களிலும் தேன்மழை பொழிகிறது. பழம் நடிகர் பாலையா வந்துபோகிறுர். ஏழைப் புலவனுக வரும் நாகேஷ் சிறிதுநேரமதோன்றினுலும் நம்மை சிரிக்க வைக்கத் தவறவில்லை. அவரதுவழமையான ஜோடி மனேரமா இதில் அவருக்குஜோடியாக நடிக்கவில்லை.

'திருவிளையாடல்' தற்பொழுது யாழ்ப்பாணம் வின்ஸர் திரையில காட்சியளிக்கிறது. நடிப்பிற்காகவும், டைரக்ஷனுக்காகவும் இனிய பாடல்களுக்காகவும் எல்லோரும் பார்க்கக் கூடியபடம்.

—யோகி

---

மண்கும்பான்

# கொலைமுயற்சி வழக்கு 16-ம் திகதி விசாரணை

யாழ்ப்பாணம், வியா.

மண்கும்பான் கொலைமுயற்சிவழக்கு நேற்றுக்காலை வடபகுதி அசைஸ் நீதிமன்றத்தில் நீதியரசர் திரு. பி. ஸ்ரீஸ்கந்தராசா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது நீதியரசர் இவ்வழக்கை இம்மாதம் 16-ம் தேதிவரை ஒத்திவைத்தார்.

அரசாங்க ரசாயன பரிசோதகர் நேற்று நீதிமன்றத்திற்கு வராததினுலேயே, நீதியரசர் இவ்வழக்கைப் பின்போட்டார்.

மண்கும்பானில் 64-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 4-ந் தேதி என். கந்தையா என்பவரை சின்னத்தம்பி ஆறுமுகம், செல்லையா செல்வரத்தினம் ஆகியோர் கொலை செய்ய முயற்சித்ததாக இவ்வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

எதிரிகள் சார்பில் அட்வகேட் ரி. கணேசலிங்கம், புறக்டர் எஸ். சி. கதிரவேலுவின் அனுசரணையுடன் ஆஜராணுர். எதிரிக்காக அரசாங்கத்தால் அட்வகேட் ஆர் ஆர் தங்கராசா நியமிக்கப்பட்டிருந்தார். அசைஸ் விசாரணை மீண்டும் இம்மாதம் 16-ம் தேதி ஆரம்பமாகும்.

---

ஆசிரியருக்குக் கடிதம்

## நல்லூர் பகுதியில்

நல்லூர்ப் பகுதியில் காடையர் நடமாட்டம் அதிகரித்து, வீதியில் நடமாடுபவருக்கும் ஏழைகளுக்கும் தொல்லை அதிகமாகியுள்ளது. சில நாட்களுக்கு முன் ஓர் அன்பர் தெருவில் நடந்து செல்லுகையில் காடை ஒருவர் அவரைத் தடுத்து அவரிடமிருந்த பணத்தையும் பறித்துப் பயமுறுத்தி அனுப்பிவிட்டாராம். ஓர் ஏழை கற்பூரம் விற்றுப் பிழைத்தவர். அவரைக் 'கப்பம்' கட்டச் சொல்லி வற்புறுத்தவே அவர் அந்த இடம்விட்டே மறைந்துவிட்டார். இன்னும் மக்களுக்குக் காடையரால் பலபல சங்கடங்கள். இதுபற்றி தக்க நடவடிக்கையை யாழ்ப்பாணக் காவலர்கள் எடுத்து காடையர் தொல்லையை நீக்க வேண்டும்.

ஓர் அன்பன்

---

காரைக்கால்

## சிவன்கோவில் உற்சவம்

கோண்டாவில், வியா.

காரைக்கால் சிவன் கோவில் இரதோற்சவமும் பூங்காவனத் திருவிழாவும் சென்றவாரம் சிறப்பாக நடைபெற்றது.

---

## பட்டினத்தார் குருபூசை

யாழ்ப்பாணம், வெள்ளி

'தெய்வம் உண்டுஎன்று இரு; பசித்தோர் முகம் பார்' போன்ற எளிய இனிய சிறிய வசனங்களில் இறைவனையும் உயரி வாழ்க்கை நெறியையும் எமக்குப் புகட்டிய பெருமை பட்டினத்தாருக்கு உரியது. அவர் முற்றும் துறந்த முனிவர்'.

இவ்வாறு சைவபரிபாலன சபை ஆதரவில் நடைபெற்ற பட்டினத்தடிகளின் குருபூசைவிழாவில் பேசிய சிவத்திரு. வை. ஆத்மநாதசர்மா உரைநிகழ்த்துகையில் கூறினுர்.

பண்டிதர் வ மு. இரத்தினேசுவரஐயர் தமது தலைமையுரையில் பட்டினத்தாரை நினைவுகொள்வதன் மூலம் நம்மெய்நெறியில், நல்லொழுக்க வழியில் வாழலாம் என்ருர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரத யுத்தத்தை இன்று காண்பது எப்படி?

வானில் தெரியும் நட்சத்திரங்கள் மிக மிகத் தொலைவில் இருக்கின்றன. அவற்றின் தூரத்தை சாதாரண மைல் கணக்கில் அளவிட முடியாது. அவற்றில் பல நமது சூரியனைக்காட்டிலும் பல்லாயிரம் மடங்கு பெரியனவை. எமது கண்களுக்குச் சிறு புள்ளிகள் போலத் தெரிவதால் அவை எவ்வளவு தூரத்தில் இருக்கின்றன என்பதை புரிந்து கொள்ள முடியும்.

நட்சத்திரங்களும் சூரியனைப்போல ஒளி வீசிக்கொண்டிருக்கின்றன. ஒளி வினாடிக்கு 1,86,000 மைல் செல்லும் எனவே நட்சத்திரங்களின் ஒளி பூமியிலிருக்கும் நம்மை வந்தடைய-அதாவது நாம் அவற்றைக் கண்ணால் பார்க்கக் கூடிய நிலைமைக்குவர-எவ்வளவுகாலம் செல்லும் என்பதை ஒளியின் வேகத்தைக் கொண்டு கணிக்கிறோம். 'அல்ஃபா சென்ரோறி' என்ற அகர நட்டத்திரத்தின்ஒளிநம்மை வந்துசேர ஐந்துவருடங்கள் பிடிக்கும்- அதன் தூரத்தை ஐந்து ஒளி வருஷ தூரம் என்று கூறுகிறோம்

சிறிய பொடி வைரக் கற்கள் போல நமது வானக் கண்ணாலே காணக்கூடிய கார்த்திகை என்ற ஆறுநட்சத்திரங்கள். இவற்றின் ஒளி நமது பூமிக்குவர 1000 வருடங்களுக்கு குறையாது என்று வான சாஸ்திரிகள் கூறுகின்றனர், கிருத்திகையிலிருந்து வருவதாக இப்போது நாம் காணும் ஒளி பல்லாயிரம் வருடங்களுக்கு முன்பு அங்கிருந்து புறப்பட்டதாகும். அந்த ஆறு நட்சத்திரங்களில் ஒன்று இடையில் அழிந்து போயிருந்தாலும், அழிந்த ஆயிரம் வருடம் கடந்தபின்பு தான் எமக்கு ஐந்து நட்சத்திரங்களாய் தெரியும். அதுவரை அழிவுக்கு முன்தோன்றிய ஆறு நட்சத்திரங்களின் ஒளியும் நமக்குத் தெரிந்து கொண்டேயிருக்கும்

நினைத்த மாத்திரத்தில், அதாவது மனோ வேகத்தில், நாம் இங்கிருந்து அந்த நட்சத்திரத்தை அடைய முடிந்து அங்கிருந்துஒருபிரமாண்டமான தூர திருஷ்டிக்கண்ணாடி மூலம் நமது பூமியை நோக்கினால், பூமியில் ஆயிரம் வருடங்களுக்கு முன்பு நடந்த பழைய சரித்திரவரலாறுகளை டெலிவிஷன் போல காண முடியுமல்லவா?

5000 ஒளி வருஷதூரத்திலுள்ள ஒரு நட்சத்திரத்தில் இப்படிநாம் போய்ப்பார்க்க முடியுமாயிருந்தால் பாரத யுத்தம் நடப்பதைக் காணலாம். அருச்சுனன் பாசுபதாஸ்திரம் பெறுவதையும், கிருஷ்ண பரமாத்மா பகவத் கீதோபதேசம் செய்வதையும், வீமன் கதையால் அடித்து துரியோதனனை வதைப்பதையும் நேரடியாக காணலாமன்றோ! ஐயையோ! அந்த வாய்ப்பு இன்னும் நமக்கு எட்டவில்லையே!

# புதையுண்ட பூம்புகார்

புதையுண்ட பண்டைச் சிறப்புவாய்ந்த பூம்புகார் நகரைத் தோண்டிக் கண்டு பிடிக்கும் வேலை தொடங்கியுள்ளது.

ஐதராபாத்திலுள்ள தேசிய புதைபொருள் ஆராய்ச்சிக் கழக நிபுணர் டாக்டர் அரி நாராயணன் தலைமையில் நிபுணர்கள் பூம்புகார் நகரம் புதையுண்ட இடத்தை தோண்டிக்கொண்டிருக்கின்றார்கள்.

தற்போதைய காவிரிப் பூம் பட்டினக் கடற்கரையில் பழைய பூம்புகார் நகரம் புதையுண்டிருப்பதாகக் கருதப்படுகிறது.

அண்மையில் பாரிஸ் நகரத்திலிருந்து புதைபொருள் ஆராய்ச்சி நிபுணர் மார்ட்டின் வந்திருந்தார். அவர் காவிரிப்பூம் பட்டினத்திற்குச் சென்று ஆராய்ச்சி நடத்தினார். புதையுண்ட பொருள்களையும் இடங்களையும் கண்டுபிடிக்கும் ஒரு கருவியின் உதவி கொண்டு அவர் ஆராய்ச்சி நடத்தினார். தற்போதைய காவிரிப்பூம் பட்டினக் கடற்கரையில் தான் பூம்புகார் நகரம் புதையுண்டிருக்கின்றது என்று அவர் கூறினார். அதனைத் தொடர்ந்தும் ஆராய்ச்சிவேலைகள் நடந்து வந்தன

ஐதராபாத்திலிருந்து புதைபொருள் ஆராய்ச்சிக் கழக இயக்குநர் அரி நாராயணன் தலைமையில் நிபுணர் குழுவினர் காவிரிப்பூம் பட்டினத்துக்கு வந்திருக்கிறார்கள். அவர்கள் கடந்த 3 நாட்களாகக் காவிரிப்பூம் பட்டினக் கடற்கரைப் பகுதியைத் தோண்டிக்கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக அந்த இடத்தில் பூம்புகார் நகரம் புதையுண்டிருக்கிறது என்று கண்டுபிடிப்பதே இவர்களது பணியாகும்.

# யாழ் வந்தனை இன்றே

பல்லவி

இன்றே அதிஷ்டமுள்ளநாள் - நாம் ஏகமாகக்கூடி
எழிலுறு நயமுற - இன்றே

கண்ணிகள்

அண்டர் புகழ நல்ல தொண்டு - பவப்பற்றுள்ள
வண்டர் கிளைந்திருளை விண்டு - பெருமெஞ்ஞான
பண்டைய நூல்கள் பலகொண்டு - பலவிடத்தும்
கண்டனை செய்வாய் நன்மைகண்டு - உலகிற்பெறும்

அமெரிக்கா லண்டன் மற்றைரோப்பா வாசம்
ஆர்ப்பரிப் போடுநினை ஏற்றுமத் தேசம்
பமகரி சநிதப பேர் பிரஸ்தாபம்
பரவி வந்தது இன்று இலங்கையின் தீபம்- இன்றே

2

கல்வி தனிலோர் கம்பன் என்றும் - கருதரிய
செல்வன் புத்தியிற் கண்ணன் என்றும் - சீருறவெகு
உல்லாசமாகக் கொலுச்சென்று - சபைதனிலே
சல்லாபமாய்க் கதையால் வென்று சட்டமுறு

சபைமிகும் பாரான் மன்றமும் பொலிய
சாதி மதம் பாஷை நன்னொலி மலிய
கதி தரும் சாட்சாத் கருணை யிதென்ன
காட்சி கவர யாழ் வந்தனை இனிது - இன்றே.

—வே. கணபதிப்பிள்ளை

# பஞ்சாமிர்தம்

தயாரிப்பு:- வி. என். பீ.

# நேருவின் அஸ்தி!!



[ஈரானில் உள்ள புகழ் பெற்ற கவிஞர் அப்துல் உசேன் செபண்டா! இவர் பாரசீக மொழியில் "நேருவின் அஸ்தி'' என்ற கவிதையை எழுதியிருக்கிறார்! அந்தக் கவிதையின்தமிழாக்கம் இது.]

எந்தநாட்டிலே, தொன்று தொட்டே எல்லா மதத்தோருக்கும் இனத்தோருக்கும் சுதந்திரம் இருந்து வருகிறதோ, எந்த நாட்டிலே, மனிதத் தன்மையின் மகிமையுணர்ந்து அசோக சக்கரவர்த்தி நாடுகளின் சுதந்திரம் பற்றிப் பிரகடனம் செய்தாரோ, அந்த நாட்டிலே — மண்ணிலே நேருவின் புனித அஸ்தி கலந்துவிட்டது.

எந்த நாட்டிலே இந்து— முஸ்லிம்—கிறிஸ்தவ ஒற்றுமையும் சுதந்திர ஒளியும், கலாசாரச் சிறப்பும் உள்ளனவோ, எந்த நாட்டிலே இந்துக்கோவில் மணியோசையும், கிறிஸ்தவ ஆலயத்தின் ஒலியும் ஒரே உண்மையைப் பறைசாற்றுகின்றனவோ, அந்த நாட்டிலே--மண்ணிலே நேருவின் புனித அஸ்தி கலந்துவிட்டது.

எந்த நாட்டிலே இரும்பு ஆலைகளும், தொழிற்கூடங்களும் கம்பீரமாக நிலைகொண்டு உள்ளனவோ, எந்த நாட்டிலே மின்சக்தி மூலமும், அணுசக்தி மூலமும் மேம்பாடு தோன்றி, விஞ்ஞான மூலமும், பரிசோதனை மூலமும் பிரச்னைகளுக்குத் தீர்வு ஏற்படுகிறதோ, அந்த நாட்டிலே— மண்ணிலே நேருவின் புனித அஸ்தி கலந்துவிட்டது!

எந்த நாட்டிலே தாகூரின் இலக்கிய மணம் கமழ்கிறதோ, எந்த நாட்டிலே தங்கமும், முத்தும், வைரமும் தோன்றி இன்று எண்ணை வளம் நிறைந்து இருக்கிறதோ, அந்த நாட்டிலே—மண்ணிலே நேருவின் புனித அஸ்தி கலந்து விட்டது.

எந்த நாட்டிலே, நாட்டியத்தில் நல்ல தத்துவமும், பாட்டிலே பேருண்மைகளும் உள்ளனவோ, எந்த நாட்டிலே கற்சிலையில் உறங்கும் ஆத்மாவின் குரல் செவிப்புலன் உள்ளோருக்கு புல்லாங்குழலாகக்-- கண்ணனின் குரலாககேட்கிறதோ, அந்த நாட்டிலே — மண்ணிலே நேருவின் புனித அஸ்தி கலந்துவிட்டது!

எந்த நாட்டிலே, எழில் மிக்கஉவகைதரும் இயற்கை அன்னை இருக்கின்றாளோ, எங்கு ஆக்ராவின் உச்சியிலே பெருமைக் கோபுரமாகத் தாஜ்மகால் எழுந்து நிற்கிறதோ, எந்த நாட்டிலே மயங்கவைக்கும் அழகிய டில்லிமாநகர் உள்ளதோ, எங்கு கங்கை ஆறு கடலோரத்துடன் உறவாடுகிறதோ, அந்த நாட்டிலே -மண்ணிலே நேருவின் புனித அஸ்தி கலந்துவிட்டது!

எந்த நாட்டிலே அண்ணல் காந்திபோன்ற உலகப் பெரியார்கள் தோன்றினார்களோ, எங்கு ஜவஹர்லால் சமாதானக்கொடியை ஏற்றிவைத்தாரோ, எந்த நாட்டிலே அரசியலில் சமாதானமும் ஆர்திமாத்தமுள்ளனவோ, எங்கு அன்பும் சகோதர உணர்வும் நிறைந்திருக்கின்றதோ அந்த நாட்டிலே-மண்ணிலே நேருவின் புனித அஸ்தி கலந்துவிட்டது!

எந்த நாட்டிலே பல ரகசியங்கள் மறைந்துகிடக்கின்றனவோ, எந்த நாடு சமய உண்மைகளை விளக்கிக் கூறிற்றோ, எந்த நாட்டிலே, பழமைச் சிறப்புடன் இன்று இளமைத் துடிப்புள்ளதோ, எந்த நாடு 'செபண்டா' (இந்தக் கவிதை எழுதியவர்) வைக் கவர்ந்து அவருக்கு இரண்டாவது சொந்த நாடு ஆகியதோ, அந்த நாட்டிலே-மண்ணிலே நேருவின் புனித அஸ்தி கலந்துவிட்டது!

# வழக்கம் வந்த விதம்

சில பழைய வழக்கங்களை மூட நம்பிக்கைகள் என்றும் சிலர் கூறுவர். ஆனால் இப்பேர்ப்பட்ட ஒவ்வொரு வழக்கமும் ஏதோ ஒரு அடிப்படையில்தான் உண்டாகியிருக்கிறது. அவை உண்டாவதற்கு விஞ்ஞான ரீதியிலோ அல்லது வேறெந்த முறையிலோ காரணங்கள் உண்டு.

சந்திர, சூரிய கிரகண நேரங்களில் உண்ணலாகாதென்றும், அச்சமயம் சூரிய சந்திரர்களை நச்சுப் பாம்பு கவ்வியிருக்குமென்றும் ஒரு பழங்கதை இருக்கிறதல்லவா? இதன் உண்மை தத்துவமென்ன?

தேவர்கள் பாற்கடலைக் கடைந்து அமுதம எடுத்து உண்டபோது ஓர் அசுரனும் அவர்களை அறியாமல் பந்தியில் குந்தினான். இதையறிந்த சூரியனும் சந்திரனும் அமுதத்தை வழங்கிக்கொண்டிருந்த திருமாலுக்கு இந்த இரகசியத்தை வெளியிட்டுவிட்டார்கள். திருமால் உடனே தாம் அமுதம் பரிமாறிக்கொண்டிருந்த அகப்பையினால் அந்த அசுரன் தலையை வெட்டினாராம் தலை வேறு முண்டம் வேறாகிவிட்டது. தலை ராகுவாயும் முண்டம் கேதுவாயும் மாறியது. தங்களைக் காட்டிக்கொடுத்த சூரிய சந்ரரை இந்த இருவரும் அடிக்கடி மூடி மறைத்துக் கொண்டிருக்கிறார்கள். இதனால்தான் கிரகணம் ஏற்படுகிறது. இது பழங்கதை.

இந்த மூடப் பழங் கதையை விஞ்ஞானம் உடைத்தெறிந்துவிட்டது. சூரியனுக்கும் பூமிக்கும் மத்தியில் சந்திரன் வரும்போது சூரிய கிரகணமும், சூரியனுக்கும் சந்திரனுக்கும் மத்தியில் பூமி வரும்போது சந்திர கிரகணமும் ஏற்படுகிறதென்பதை விஞ்ஞானிகள் கண்டுபிடித்து விட்டார்கள்.

கிரகண காலங்களில் உண்ணலாகாது என்ற சட்டம் ஏன் பிறந்தது?

கிரகண காலத்தில் பவனத்தில் ஒருவித நச்சுக் காற்று பரவுகிறதென்று இப்பொழுது விஞ்ஞானிகள் கண்டுபிடித்திருக்கிறார்கள். இக்காலத்தில் உணவு உண்டால் அந்த நச்சுத்தன்மை உணவையும் தாக்கக்கூடும்.

இப்படி இன்னும் பல 'மூடநம்பிக்கைகள்' என்று சொல்லக்கூடியவை உண்டு இவற்றில் சிலவற்றை கீழே தருகிறேன். அவை எப்படி, என்னத்திற்காக ஏற்பட்டவை என்பது பற்றி நேயர்கள் எழுதி அனுப்பலாம்.

1. பொழுதுபட்ட பின்னர் உப்பு. உறைமோர், ஊசி, காசு, நல்லெண்ணெய், முட்டை, முடியோடு தேங்காய், வண்ணானுக்குத் துணி முதலியவை பிறருக்குக் கொடுக்கக்கூடாதென்பது.

2. பல் விழுந்தால் பாம்புப் புற்றுக்குள் அல்லது கூரைக்குமேல் போடவேண்டும் என்பது.

3. உரலுக்குமேல் இருக்கக்கூடாதென்பது. அதில் இருந்துகொண்டு தாலிக்காரப் பெண்களைப் பார்க்கக்கூடாதென்பது, உரலுக்குள் உலக்கையை நிறுத்திய பின் அதன்மேல் காகம் இருக்கக்கூடாதென்பது, உலக்கையைக் கடக்கக்கூடாதென்பது.

இப்படி இன்னும் நூற்றுக்கணக்கான வழக்கங்கள் இருக்கின்றன. அவற்றை இந்த 'பஞ்சாமிர்தத்'தில் வாரந்தோறும் வெளியிடுவேன். வாசிக்கும் நேயர்கள் அவற்றிற்கு விளக்கம் தரும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

# பாதி மூளையின்றியும் வேலைசெய்யலாம்

மொஸ்கோ, ஆக. 11

மூளையின் சரிபாதி சத்திரசிகிச்சை மூலம் அகற்றப்பட்டபின்பும் ஒரு அமெரிக்கர் எப்படி நடந்து, கதைத்து, பாடி கணக்குச்செய்ய முடிகிறதென்பதை ஆச்சரியவசப்பட்ட 150 உளவியலாளர் இங்கு கேட்டனர்

நெப்ராஸ்கா பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த மருத்துவக் கல்லூரியின் டாக்டர் ஆரன் சிமித் என்பவர், இடதுபக்க மூளை அகற்றப்பட்ட ஒருவரைப் பற்றி ஐந்து மாதங்களுக்குப்பின் எடுக்கப்பட்ட சினிமாப் படத்தை இந்த உளவியலாளருக்குக் காண்பித்தார்.

மூளையின் இயக்கம் பற்றிய பாடப்புத்தகக் கூற்றுக்கள் தவறானவை என்பதை மேற்கூறிய சம்பவம் தெளிவாக நிரூபித்துவிட்டதென டாக்டர் சிமித், இங்கு நடைபெற்ற சர்வதேச உளவியலாளர் மகாநாட்டில் சகாக்களிடம் தெரிவித்தார்.

டாக்டர் சிமித்தின் 47 வயது நோயாளி காட்டியுள்ள ஆற்றல்கள் இடதுபக்க மூளை அகற்றப்பட்ட ஒரு மனிதனால் சாதிக்க முடியாதவை எனப் பாடப் புத்தகங்கள் கூறுகின்றன. பேசுதல், எழுதுதல், சிந்தித்தல் ஆகிய தொழில்களை ஒரு மனிதனின் மூளையின் இடதுபாகமே செய்கிறது என்றே உளவியலாளர் எல்லோரும் இதுவரை நம்பி வந்தனர்.

இடதுபாகம் அகற்றப்பட்டபின்னும் மனிதன் தனது முக்கிய காரியங்களை ஆற்றமுடியாது; இடதுபக்க மூளையின் இழப்பை வலதுபக்க மூளையால் நிவர்த்திசெய்ய முடியுமென்பதையே காட்டுகிறது என டாக்டர் சிமித் கருத்துதெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருத்திரபுரம்

# காந்தி நிலையத்துக்கு தமிழக அம்பர் ராட்டைகள்

## இந்திய தூதர் அத்திவாரமிடுவார்

கிளிநொச்சி, வியாழன்

அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தின் 17-வது ஆண்டு பொதுக்கூட்டம் இம்மாதம் 22-ம் திகதி முற்பகல் வண்ணார்பண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் நடைபெறும். மாலை 5 மணிக்கு யாழ்ப்பாணம் நகரமண்டபத்தில் அகில இலங்கைக் காந்தி சேவா சங்க வருடாந்தவிழா நடைபெறும். இலங்கையிலுள்ள இந்திய தூதுவர் கௌரவ பீம்சென் சச்சார் "இன்றைய உலகுக்கு காந்திஜியின் செய்திகள்" என்ற விஷயம்பற்றி ஒரு விரிவுரையாற்றுவார். கூட்டத்துக்கு சங்கத்தலைவர் திரு. கு. நேசையா தலைமை தாங்குவார்.

திரு. சச்சார் இந்த மாதம் 21-ம் திகதி முற்பகல் 9 மணிக்கு உருத்திரபுரம் காந்தி நிலைய மாணவர் குருகுலத்துக்கு விஜயம் செய்து காந்திநிலையத்தில் சர்வோதய நூலகத்தைத் திறந்துவைப்பார். அதன்பின் அம்பர் இராட்டைப் பயிற்சி நிலையத்துக்கு அத்திவாரம் இடுவார்.

காந்தி நிலையத்து அம்பர் இராட்டைப் பயிற்சி நிலையத்தில் படித்த மாணவ மாணவிகளுக்கு பஞ்சில் இருந்து அம்பர் இராட்டை மூலம் நூல்நூற்றல், முதலிய பயிற்சி 6 மாத காலத்துக்கு அளிக்கப்படும். பயிற்சியில் திறமைபெற்றவர்களுக்கு பின்னர் காந்தி நிலையத்திலோ அல்லது வேறு இடங்களில் காந்திசேவா சங்கம் நடாத்தும் தொழில் நிலையங்களிலோ வேலை கொடுக்கப்படும். இந்தப் பயிற்சி 1967-ம் ஆண்டு ஆரம்பமாகும்.

காந்திநிலையத்தில் அம்பர் இராட்டைப் பயிற்சிக்கான அம்பர் இராட்டைகள் தமிழ்நாடு சர்வோதய சங்கத்தில் இருந்து வரவழைக்கப்படவிருக்கின்றன. இதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் நடைபெற்றுவருவதாகத் தெரிகின்றது.

## நிரந்தரக்குழு 14-ந் திகதி கூடுகிறது

கொழும்பு, வியாழன்

உயர்கல்வி மசோதா சம்பந்தமாக பரிசிலனை செய்துவரும் நிரந்தரக்குழு இம்மாதம் 14-ந் திகதி மீண்டும் கூடவிருக்கிறது.

சென்ற 7-ந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் சுமார் ஐம்பது திருத்தப் பிரேரணைகள் பரிசீலிக்கப்பட்டன. மிகுதி 14-ந் திகதி நடைபெறவிருக்கும் கூட்டத்தில் பரிசிலனை செய்யப்படவிருக்கின்றன.

மூன்றுவது வாசிப்பின் மசோதா செனட் சபைக்கு சமர்ப்பிக்கப்படும், இங்கும் சில திருத்தங்கள் கொண்டு வரப்படுமென அறியப்படுகிறது.

## சௌக்கிய பரிசோதகர் தேர்வில் சித்தபெற்றுர்

சங்கானை புதன்

லண்டன் றோயல் சௌக்கியசங்கத்தினரால் சென்ற மாதம் இறுதியில் பொது சௌக்கிய பரிசோதகர் பரீட்சை நடாத்தப்பட்டது.

இப்பரீட்சையில் பின்வருவோர் சித்தியெய்தியுள்ளனர். கே. இரவீந்திரன், ஆ. ஆ. றொபேட்ஸ், ஏ. கே. இரங்கநாதன், பி. சாந்தமூர்த்தி, எஸ். ஈ. கிங்ஸ்லி பீ. கே விமலநாதன், கே. செல்வராசா, எஸ். நாகையா.

இவர்கள் செப்டம்பர் மாதம் 1-ம் திகதி பதவியேற்று இலங்கையின் பல்வேறு பகுதிகட்கு பொது சௌக்கிய பரிசோதகர்களாக அனுப்பிவைக்கப்படுவார்கள் எனத்தெரியவருகிறது.

## யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கும் கைத்தொழில் பொருட்காட்சி

இமையாணன், வியா.

யாழ் பிரதேச கலாமன்றத்தினர் இம்மாதம் 26-ம் திகதி தொடக்கம் 29-ம் திகதிவரை யாழ்ப்பாணத்தில் ஓர் பெரும் கைத்தொழில் பொருட்காட்சியை நடாத்தவிருக்கின்றனர். யாழ்ப்பாணத்திலுள்ள பல்வேறு சங்கங்கள், நிலையங்கள் மாத்திரமன்றி, தனிப்பட்டவர்களும் இக் கைத்தொழில் பொருட்காட்சிக்காக மட்பொருள்கள், மரப்பொருள்கள், நகைகள் போன்ற கைத்தொழிற் பொருட்கள் மாத்திரமன்றி ஓவியங்களும், இன்னும் பல பொருட்களும் அனுப்பி வைத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. வேறு யாரும் இப் பொருட்காட்சிக்குப் பங்குபற்ற விரும்பின் உடனடியாக யாழ்ப்பாண சிறு குடிசைக் கைத்தொழில் இலாகாவினருடன் தொடர்பு கொள்ள வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இப் பொருட்காட்சியில் வைக்கப்படும் பொருட்கள் போட்டிக்கு வைக்கப்படுகின்றன எனவும், அவற்றில் சிறந்த பொருள்களுக்கு சிறந்த பரிசில்கள் வழங்கப் படும் எனவும் தெரிய வருகிறது.

## உபயோகமற்ற தபாற்பெட்டி

சங்கானை, வியா.

கோண்டாவில் புகையிரத நிலையத்திற்கு அண்மையில் உள்ள தபாற்பெட்டி அடிப்பாகம் உடைந்து பொது ஜனபாவிப்புக்கு முடியாத சீர்கெட்ட நிலையில் உள்ளது. இதைப்பாவிக்கும் பொது மக்கள் சுமார் ஒருமைல் தூரத்திற்கு அப்பால்சென்றுதான் கடிதங்கள் அனுப்பவேண்டியிருப்பதாக அறியப்படுகிறது.




## கொழும்பு
### 12 - 8 - 66 வெள்ளி

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

844 மீற்றர் & 61 மீற்றர்

காலை 6-45 நாதாஞ்சலி, 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-15 துதிப்பாடல்கள், 7-30 குரல்வளை, 7-45 தோத்திரப்பாடல்கள்—கே. மாணிக்கவாசகர், 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

844 மீட்டர் & 41 மீட்டர்

பகல் 12-00 சித்திர கானம், 1-00 கதம்ப இசை.

844 மீற்றர் & 61 மீற்றர்

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 படத்திவிருந்து!

இரவு 6-15 கிராம சஞ்சிகை, 6-45 முத்திநெறி—சைவசஞ்சிகை, 7-15 பாட்டு, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 பேச்சு, 9-30 தேர்ந்த இசை, 10-00 நேயர் விருப்பம்


# 50 சதத்துடன் விரைவில் செல்வந்தராகுங்கள்

ஒவ்வொரு வாரமும், நூற்றுக்கு மேற்பட்டவர்கள் விரைவில் செல்வந்தராகி வருகின்றனர்.



அடுத்து உங்கள் முறை ஆகலாம்

50 சதத்திற்கு நீங்கள் புத்தம் புதிய கார் ஒன்றையும் பெருந் தொகைக்கான காசோலையையும் பெறலாம்.

அதிர்ஷ்டத்தை எதிர்பார்த்து இராதீர் உங்கள் தேசிய லொத்தர் சுவீப் டிக்கெட்டுகளை இன்றே வாங்குங்கள்.


NATIONAL LOTTERIES No. 90
Cents Fifty
Not valid for sale after draw at 4.15 p.m. on
71 V 0378
தேசிய லொத்தர் சபையால் நடத்தப்படும் லொத்தர். Lottery conducted by the National Lotteries Board under Finance Act No. 11. 1963. PRINTED AT THE GOVT. PRESS, CEYLON

## உங்கள் அடுத்த பெரிய சுவீப்

1966 ஆகஸ்ட் 18ந் திகதி திஸமஹாராமையில் நடைபெறும்

1வது பரிசு ரூ. 100,000 அல்லது புத்தம் புதிய ஆஸ்டின் கேம்பிரிட்ஜ் 60ம் ரூ. 72,750/- ரொக்கமும்.

2வது பரிசு ரூ. 40,000 அல்லதுபுத்தம்புதிய ஆஸ்டின் மினியும் ரூ. 28,500/- ரொக்கமும்.

3வது பரிசு ரூ. 10,000

100 பெரிய ஆறுதல் பரிசுகள்



கடந்த கார் சுவீப் சீட்டிழுப்பில் 100 அதிர்ஷ்டசாலிகள் ரூ. 2172/- ரூபா பரிசு பெற்றுள்ளனர்.

சீட்டிழுத்த பின்னர் 14 நாட்களுக்குள் மட்டும் இந்த மோட்டார் வண்டிகளை வாங்கும் விருப்புரிமை செல்லுபடியாகும்.

(இவை தீர்வை உட்பட வழமையான சொம்பனி நிரல் விலைகள்)

## ஞாபகத்திலிருக்கட்டும்:-

நீங்கள் வாங்கும் ஒவ்வொரு தேசிய லொத்தர் சுவீப் டிக்கெட்டும் அதிர்ஷ்டத்தின் வாயிலுக்கு உங்களை அழைத்துச் செல்கிறது.

50 சதம் முதலீடு செய்து பெரும் செல்வம் தேடுங்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2 ஆயிரத்துக்கு மேற்பட்டோர் அரிசிக் கூப்பன் இழந்துள்ளனர்

## செப்டம்பர் 12-ல் புதிய கூப்பன் பாவனைக்கு வரும்

யாழப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாண மாவட்டத்தில் 2000-க்கு மேற்பட்டவர்கள் அரிசிக் கூப்பன்களை இழந்திருக்கிறார்கள். தீ விபத்து, நீரினால் ஏற்பட்ட சேதம், களவு, காணமற்போனது ஆகிய அம்சங்கள் இவற்றுக்கான காரணங்களாகும்.

வடமாகாணத்தில் 12 காரியாதிகாரிகளின் பிரிவுகளில் சுமார் 8 லட்சம் புதிய கூப்பன்கள் வழங்கப்படவிருக்கின்றன. இவற்றில் ஏற்கனவே பலருக்குப் புதிய கூப்பன்கள் வழங்கப்பட்டுவிட்டன. புதிய கூப்பன்கள் சம்பந்தமான புகார்கள், சம்பந்தப்பட்ட பகுதிகளின் காரியாதிகாரிகளுக்கு தெரிவிக்கப்பட வேண்டும்.

அதேசமயம் இனி கூப்பன்களைப் பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டும் என்றும், தொலைந்தால் மீண்டும் பெறுவது கஷ்டம் என்றும் மாவட்ட உணவு அதிகாரி தெரிவித்திருக்கிறார்.

புதிய கூப்பன், அரிசிக்கும் துணிக்குமாக ஒன்றாக இணைக்கப்பட்டுள்ளது என்றும், துணிக் கூப்பன்களுக்கு தனியான இலக்கங்கள் இருக்கின்றன என்றும் அவர் மேலும் கூறினார்.

செப்டம்பர் 12-ம் திகதி முதல் புதிய அரிசிக்கூப்பன்கள் பாவனைக்கு வரும். அதுவரை விநியோகமும் நடைபெறும். ஏற்கனவே புதிய அரிசிக் கூப்பன்களில் சில இடங்களில் விநியோகிக்கப் பட்டுவிட்டன.

# 'பொருளாதார பிரச்னைதீர கல்வி உதவவேண்டும்'

— எம். பி

கிளிநொச்சி, வியாழன்

மாணவர்கள் ஏட்டுக் கல்வி மட்டும் கற்றால் போதாது. பொருளாதாரச் சிக்கலை நீக்கக்கூடிய காந்திஜி போன்ற பெரியார்கள் கடைப்பிடித்த வாழ்க்கையை வளம்பெறச் செய்யும் ஆதாரக் கல்வியையும் கற்றால்தான் இக்கால பொருளாதாரப் பிரச்னையை நிவர்த்தி செய்வதுடன் தங்கள் வாழ்வையும் நயமுடன் கொண்டு நடத்த முடியும். எமது பகுதியில் உள்ள பாடசாலைகளின் நோக்கத்தை, நிலைமையை அப்பகுதி மக்களுக்குத் தான் நன்கு தெரியும். எமது பகுதியின் நிர்வாகப் பொறுப்பு எமது கையில் இருக்க வேண்டும். எம்மை ஆளும் பொறுப்பு எமது கையில் இருக்குமானால் 24 மணித்தியாலத்தில் கல்வித் திட்டத்தில் செம்மையானவற்றைச் செயல்படுத்தமுடியும்.

இவ்வாறு கிளிநொச்சி எம். பி. திரு. கா. பொ. இரத்தினம் கிளிநொச்சி இந்து தமிழ்க்கலவன் பாடசாலை பெற்றார் தினவிழாவிற்குத்தலைமை வகித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

''அரசியல் அமைப்பு நன்றாக இருந்தால்தான் கல்வி, வாழ்வு, நலம் மக்களிடையே செம்மையாகத் திகழும். இம்மாற்றத்தைச் செயல்படுத்த தற்பொழுது அரசாங்கம் பாடசாலைகளின் பொறுப்பை பெற்றார்வசம் ஒப்படைக்க முன்வந்துள்ளது. எமது தேவைகள் யாவும் அரசாங்கத்தால் நிவர்த்தி செய்யலாம் என நம்பியிராது பெற்றோர் தங்கள் முயற்சியினால் எமது தேவைகளைப் பூர்த்தி செய்யும் ஆதாரக் கல்வித்திட்டம் போன்ற துறையில் தங்கள் பிள்ளைகளை வழிநடக்கச் செய்ய வேண்டும். நாம் கேட்டதைத் தரும் கற்பக தருவோ அல்லது காமதேனுவோ அல்ல அரசாங்கம். நமது தேவையை நாம் எமது முயற்சியினால் நிவர்த்தி செய்ய வேண்டும்.

இன்று இப்பாடசாலையின் பெற்றோர்களும் ஆசிரியர்களும் மிகவும் ஒற்றுமையாக நாட்டின் முன்னேற்றம் கருதி ஒத்துழைத்ததினால் இப்பாடசாலை ஆதாரக்கல்வித் திட்டத்தைச் செயல்படுத்துகின்றீர்கள். இதனையிட்டு நான் பெரிதும் மகிழ்ச்சி அடைகிறேன்.''

தலைமை ஆசிரியர் திரு. வே கதிரவேலு பாடசாலை அறிக்கையை வாசித்தார். கலைநிகழ்ச்சி ஒன்றும் நடைபெற்றது.

## பொத்துவிலில் நீர்விநியோக திட்டம்

பொத்துவில், வெள்ளி

நில அபிவிருத்தித்திட்டத்தின் கீழ்காணி விநியோகிக்கப்பட்ட 600 பேரின் நன்மைக்காக ரூபா இரண்டரை லட்சம் செலவுள்ள நீர் விநியோகத் திட்டத்தை ஆரம்பிக்கக் காணிக்கொமிஷனர் தீர்மானித்துள்ளனர். மேலும் இரண்டு நீர்விநியோகத் திட்டங்கள் இவ்வருடத்தில் உள்ளூராட்சி இலாகாவினால் மேற்கொள்ளப் படுமெனத்தெரிகிறது.

## சீமெந்துத் தொழிற்சாலைக்கு அமைச்சர் விஜயம்

மாவிட்டபுரம், வியா.

காங்கேசன்துறை சிமெந்துத்தொழிற்சாலைக்கு கைத்தொழில் மீன்பிடி மந்திரி திரு. பிலிப் குணவர்த்தன நேற்றுப் பிற்பகல் விஜயஞ் செய்தார். சீமெந்து தொழிற்சாலைக்கு விஜயஞ் செய்த மந்திரியை தொழிற்சாலை அதிபர் திரு. எஸ், சுப்பிரமணியம், சீமெந்து கூட்டுத்தாபன ஜெனரல் மனேஜர் டாக்டர் பேரம்பலம் ஆகியோர் வரவேற்று தொழிற்சாலையின்இரண்டாவது சூளை அபிவிருத்தி வேலைத்திட்டங்களைக் காண்பித்தனர். அபிவிருத்தி வேலைகளைப் பார்த்து மந்திரி மகிழ்ச்சி தெரிவித்தார்.

அமைச்சர் திரு. பிலிப் நேற்று மாலை விமானமூலம் கொழும்பு திரும்பினார், அமைச்சருடன் உதவி நிரந்தரக் காரியதரிசி திரு ஏ பி எல்கடுவவும் வந்திருந்தார்.

காலையில் பரந்தன் ரசாயனத் தொழிற்சாலைக்கும் அமைச்சர் விஜயஞ் செய்து பார்வையிட்டார்.

## பிரஜாவுரிமை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை பிரஜாவுரிமை எடுத்துக்கொடுக்க முயன்றனர். அதன் காரணமாக திரு. பாப்புராஜ் என்பவரின் உதவியுடன் சுல்தானின் மைத்துனரும் மற்றவர்களும் ஞானசிஹதேரோவை சென்று கண்டார்கள் ஞானசிஹதேரோ அரசியல் செல்வாக்கு மிக்கவராக அப்போது இருந்தார். அதன்பேரில் அவர் வெளிவிவகார அமைச்சைச் சேர்ந்த ஏக்கநாயக்க என்பவருடன் தொடர்பு கொண்டார். அவர் பிரதம மந்திரி அல்லது திரு. என். கியு. டயஸுக்கு தான் முடியும் என்று அவர் தெரிவித்துவிட்டார். பின்னர் அவர்கள் இரண்டாவது எதிரியைக் கண்டு பேசினார்கள். அவர் அந்த விஷயத்தை மெக்கிரத்வத்தை மூலம் செய்ய முடியும் என்று கூறி அலறி மாளிகைக்கு அழைத்துச் சென்றார் அவர்கள் மாளிகையின் வெளியிலேயே நின்றனர். 2-ம் எதிரி திரும்பி வந்து முதல் எதிரி 5000 கேட்பதாகக் கூறினார் உடனே பாப்புராஜ் ரூ 1500 ரூபாய்க்கு செக் கொடுத்தார் செக்வேண்டாம்என்று கூறியதால் அதைப்பணமாக மாற்றிக்கொடுத்தனர். மீதி தொகையை 2 நாட்களுக்குப்பின் பலாலிகொடை வாடிவீட்டில் வைத்து சிவரத்தினத்திடம் கொடுத்தனர். பிறகு அவர்கள் ரத்வத்தை வளவுக்குப் போனார்கள். அங்கு சிவரத்தினம் மாளிகையில் போய் மெக்கிரத்வத்தையை சந்தித்தனர் பின் அவரிடமிருந்து ஸ்டான்ன ஜயவீர என்பவருக்கு முகவரி இடப்பட்ட கடிதம் ஒன்றைக் கொண்டுவந்து கொடுத்தார். பின்னர்அவர்கள் வெளிவிவகாரப் பகுதியில் ஸ்டான்ன ஜயவீரயைப் போய்ப்பார்த்தனர். அவர் 'பைல்' ஒன்றை எடுத்து பார்த்தார். பின் அவர்களுக்குப் பிறகு அறிவிப்பதாகக் கூறினார்.

சில தினங்களாகியும் பதிலில்லாததால் அவர்கள் சிவரத்தினத்துக்கு கடிதம் எழுதினர் இதற்கிடையில்தமது கணவனுக்கு பிரஜாவுரிமை கொடுக்கும்படிகோரி சுல்தானின் மனைவியும் ஒரு மனு வைத்தாக்கல் செய்தார். அந்த மனுவில் மெக்கிரத்வத்தையின் ஒரு குறிப்பும் இருந்தது. அதன் பிறகு நிலைமைசங்கடமாகவே அவர்கள் 2-வது எதிரியைப்போய் பார்த்தனர் அவர் அப்பணத்தை திருப்பி எடுப்பதற்கு முயற்சிப்பதாகக் கூறினார். ஆனால் அதுவும் தாமதமாகவே அவர்கள் லஞ்ச விசாரணைக் கமிஷனுக்கு புகார் செய்தனர். லஞ்சக்கமிஷன் அவர்களின்புகார்களை பதிவு செய்தது,

பணம் பெற்றுக்கொள்ளவில்லையென்று கூறுவதற்கு சிவரத்தினத்திடம் தன்தா வேஜூ ஒன்று இருப்பதாகக் கூறபபடுவது ஜோ ₜக்கப் பட்ட ஒன்று.

சதிபுரிந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை நீதிபதி விசாரிக்க அதிகாரம் இல்லையென்று கூறி லஞ்சக் குற்றச்சாட்டுகளை மட்டும் விசாரணைக்கு எடுத்துக்கொண்டார்.

## விளையாடும்போது தாக்கப்பட்டார்

### சிறுவன் மரணம்

நீர்கொழும்பு, வியா.

நீர்கொழும்புக்கு அருகிலுள்ள தாலவில என்னும் இடத்தில், விளையாட்டு மைதானமொன்றில் உதைபந்தாட்டத்தில் ஈடுபட்டிருந்த 14 வயதுச் சிறுவன், ஏ. விஜயசிறி அடித்து [illegible] வாக மரணமாகியுள்ளார். இது சம்பந்தமாக [illegible]

# புதிய டயர் விநியோக திட்டம்

## இன்று முடிவாகும்

கொழும்பு, வெள்ளி

புதிய டயர் விநியோகத் திட்டம் பற்றி இன்று முடிவு செய்யப்படும். இலங்கை வர்த்தக சங்கத்தினால் தயாரித்து வர்த்தக அமைச்சுக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இத்திட்டத்தின் கீழ், மாகாண டயர் விநியோகஸ்தர்கள் வாடிக்கையாளரின் கார்ப் பதிவுப் புத்தகத்தைக் கொழும்பிலுள்ள இறக்குமதியாளருக்கு அனுப்பி, முத்திரை ஒட்டுவித்த பிறகே டயர்களை விநியோகிக்கலாம்.

இப்பொழுது ஒவ்வொரு மோட்டார்கார் சொந்தக்காரருக்கும் அவருடைய கார் பதிவுப் புத்தகத்தில் விநியோகஸ்தர்களே முத்திரை ஒட்டிவிட்டு இரண்டு டயர்களை விநியோகிக்கிறார்கள் இந்த விநியோக முறை துர்ப்பிரயோகத்துக்கு இடமளித்திருக்கிறது. இதையே புதிய திட்டம் மூலம் அகற்றலாமென எதிர்பார்க்கப் படுகிறது.

# கவர்னர் ஜெனரல் நியமனம் செய்யவேண்டும்!

## கல்வி தேசிய நியமனம் பற்றி நிரந்தரக்குழுவின் யோசனை

கொழும்பு, வெள்ளி

உயர்தரக்கல்வி மசோதாவின் திருத்தப்பிரேரணைகளை ஆராய்ந்துவரும் ஜனப்பிரதிநிதிகள் சபையின் நிரந்தரக்குழுவினர் ஏற்கனவே உத்தேச உயர்தரக் கல்வித் தேசியச் சபைக்கான நியமனங்களை கவர்னர் ஜெனரலே செய்யவேண்டுமெனச் சிபார்சு செய்திருப்பதாகத் தெரியவருகிறது.

பாராளுமன்றத்தில் சமர்பிக்கப்பட்ட உயர்தரக் கல்வி மசோதாவின் படி, இந் நியமனங்களைக் கல்வி அமைச்சர் செய்யவேண்டுமெனக் கோரப்பட்டிருந்தது.

துர்ப்பிரயோகத்துக்கு வழிசெய்வதுடன், கல்வி அமைச்சரை எல்லாம் வல்லவராக்கியும் விடுமென்ற காரணத்தால் இந் நியமன அதிகாரத்தைக் கல்வி அமைச்சரின் கைகளில் ஒப்படைப்பதை எதிர்த்து பல கல்விமான்களும், பாராளுமன்ற அங்கத்தவர்களும் கருத்து தெரிவித்திருக்கின்றார்கள்.

கடந்த கூட்டத்தில் ஆராயப்படாத பிரேரணைகளை ஆராய எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை மீண்டும் நிரந்தரக்குழு கூடுகின்றது.

## தாக்கப்பட்டு கான்ஸ்டபிள் மரணம்

கொழும்பு. வியாழன்

கொள்ளுப்பிட்டியைச் சேர்ந்த 30 வயதுடைய திரு. பாலசிங்கம் என்ற பொலிஸ் கான்ஸ்டபிள் தேடப்பட்டு வந்த சந்தேகநபர் ஒருவரினால் தாக்கப்பட்டு மரணமானார்.

இந்த கான்ஸ்டபிள் பாலகேடியோனிஸ் என்பவர் மீது பிறப்பிக்கப்பட்ட வாரண்ட் சம்பந்தமாக குறிப்பிட்ட நபரைத்தேடிச் சென்றதாகவும் சந்தேகநபரைக் கைதுசெய்யப்போன சமயத்திலேயே இவர்தாக்கப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

காலம் சென்ற பொலிஸ் கான்ஸ்டபிள் திருமணமானவரென்றும் அவருக்கு நான்கு வயதுடைய குழந்தையொன்று உண்டு என்றும் அறியப்படுகிறது.

## ஈட்டுப்பத்திரம் எடுத்து செல்ல முயன்றார்

மாவிட்டபுரம், வியா.

கம்பளையைச் சேர்ந்தவரும், பதியப்பட்ட இலங்கைப் பிரசையுமாகிய ஒரு பெண்மணி விமானமூலம் இந்தியா செல்லுகையில் தன்னுடன் 9320 ரூபா பெறுமதியான ஓர் ஈட்டுப்பத்திரத்தை எடுத்துச் செல்ல முற்படுகையில் பலாலி விமான நிலையத்தில் வைத்து காங்கேசன்துறை சுங்கப் பகுதியினரால் தடுத்து நிறுத்தப் பட்டார். இது சம்பந்தமாக விசாரனை செய்த சுங்கப் பகுதியினர் ஈட்டுப் பத்திரத்தை இந்தியா எடுத்துச் செல்ல அனுமதி மறுத்ததுடன் சட்டவிரோதமாக எடுத்து செல்ல முயன்ற குற்றத்திற்காக 750 ரூபாய் அபராதம் செலுத்தும்படியும் உத்தரவிட்டார்கள். பெண்மணி அபராதம் செலுத்திய பின் தொடர்ந்து பிரயாணம் செய்ய அனுமதிக்கப்பட்டார்.

மோர் 15 வயதுச் சிறுவனை எம். வி. டி. பெர்னாண்டோ மொர்ணண்டோ பொலிசாரால் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

## கூட்டுப்பிரார்த்தனை

நயினாதீவு, வியாழன்

நயினை ஸ்ரீ வீரகத்திவிநாயகர் ஆலயத்தில்வாரந்தோறும் வெள்ளிக்கிழமை நாட்களில் மாலை 6 மணி முதல் 8 மணிவரை மேற்படி ஆலய கூட்டுப் பிரார்த்தனை சபையின் ஆதரவில் கூட்டு வழிபாடு நடைபெற்றுவருகின்றது.

## பெற்றார்-ஆசிரியர் சங்கக் கூட்டம்

யாழ்ப்பாணம், வெள்ளி

திருஞானசம்பந்த வித்தியாசாலைப் பெற்றார் ஆசிரியர் சங்கம், தலைமை ஆசிரியர் திரு. க. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்றபோது தலைவர், பெற்றார்-ஆசிரிய சங்கத்தின் முக்கியத்துவத்தையும் பெற்றாரது கடமையையும் பற்றிக் கூறினார். பெற்றாரது பொறுப்பையும் அவர்களால் பள்ளிக்கூடம் வளர்ச்சியடையும் முறைபற்றியும் அவர் விபரமாகக் கூறினார்.

பின்வருவோர் சங்கத்தின் புதுவருட உத்தியோகத்தர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர். உபதலைவர் திரு.கே. எஸ். குமாரசாமி; காரியதரிசி திரு. வ. துரைச்சாமி; உபகாரியதரிசி திரு. ச, இரத்தினசபாபதி; தனாதிகாரி திரு. க. விஸ்வநாதன்; நிர்வாகக் குழு ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது.

இப் பத்திரிகை ஈழநாடு லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் [illegible] வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1966-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 12-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org